| கொள்கைத் தலைப்பு<br>**Medical Financial Assistance** | கொள்கை எண்<br>**NATL.CB.307** |
|---|---|
| பொறுப்புத் துறை<br>**தேசிய சமூக ஆரோக்கியம்** | தொடங்கும் தேதி<br>**ஜனவரி 1, 2024** |
| ஆவண உரிமையாளர்<br>**இயக்குநர், Medical Financial Assistance** | பக்கம்<br>**1 / 51** |

## 1.0 பாலிசி அறிக்கை

Kaiser Foundation Health Plans (KFHP) மற்றும் Kaiser Foundation Hospitals (KFH) ஆகியவை நோய்வாய்ப்படக்கூடிய மக்கள் எளிதில் பராமரிப்பை அணுகுவதற்கான வசதியை ஏற்படுத்தித் தரும் திட்டங்களை வழங்குவதற்குப் பொறுப்பேற்றுள்ளன. அவசரநிலை மற்றும் மருத்துவரீதியாக அவசியமான பராமரிப்பை அணுகுவதற்கு, இந்தச் சேவைகளுக்குப் பணம் செலுத்தும் திறன் ஒரு தடையாக இருக்கும்போது காப்பீடு செய்துகொள்ளாத மற்றும் குறைந்த தொகைக்குக் காப்பீடு செய்துள்ள வருமானம் குறைவாக உள்ள நோயாளிகளுக்கு நிதி உதவிகளை வழங்குவதும் இந்தப் பொறுப்பேற்பில் அடங்கும்.

## 2.0 நோக்கம்

Medical Financial Assistance (MFA) திட்டம் வழியாக அவசரநிலை மற்றும் மருத்துவரீதியாக அவசியமான பராமரிப்பைப் பெறுவதற்குத் தகுதிபெறுவதற்கான தேவைகளை இந்த பாலிசி விளக்குகிறது. இந்தத் தேவைகள் அமெரிக்க உள்துறை வருமான விதியின் பிரிவு 501(r)க்கு இணங்குவது என்பதுடன் தகுதியுள்ள சேவைகள், அணுகலைப் பெறும் முறை, திட்டத்திற்கான தகுதிநிலை அளவுகோல், MFA விருதுகளின் கட்டமைப்பு, விருதுத் தொகைகளைக் கணக்கிடுவதற்கான அடிப்படை மற்றும் மருத்துவச் செலவுகளை செலுத்த முடியாத நிலையில் அனுமதிக்கப்படக்கூடிய செயல்பாடுகள் ஆகியவற்றை குறிப்பிடுகின்ற மாகாண நெறிமுறைகளுக்குப் பொருந்துவதாகும்.

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

## 3.0 வாய்ப்பு

பின்வரும் நிறுவனங்கள் மற்றும் அவற்றின் துணைநிறுவனங்களால் வேலைக்கு அமர்த்தப்பட்ட பணியாளர்களுக்கு இந்த பாலிசி பொருந்தும் (ஒட்டுமொத்தமாக “KFHP/H” எனப்படுவது):

**3.1** Kaiser Foundation Health Plan, Inc. (KFHP);

**3.2** Kaiser Foundation Hospitals (KFH); மற்றும்

**3.3** KFHP/H துணை நிறுவனங்கள்.

**3.4** இந்த பாலிசியானது Kaiser Foundation Hospitals மற்றும் *Kaiser Permanente பிரதேசங்களுக்கான பிற்சேர்க்கைகள், இணைப்புகள் 1-8* இல் பட்டியலிடப்பட்டுள்ள மருத்துமனையின் உதவிபெறும் கிளினிக்குகளுக்குப் பொருந்தும்.

## 4.0 வரையறைகள்

பார்க்கவும் *பிற்சேர்க்கை A – சொற்களஞ்சியம்*.

## 5.0 ஒதுக்கீடுகள்

நோயாளியின் வயது, இயலாமை, பாலினம், இனம், மதச் சார்புநிலை அல்லது புலம்பெயர் நிலை, பாலியல் சார்புநிலை, பூர்வீக தேசம் மற்றும் அந்த நோயாளிக்கு மருத்துவ காப்பீடு இருக்கிறதா என்பவை பற்றியெல்லாம் பொருட்படுத்தாமல் அவசரநிலை மற்றும் மருத்துவரீதியாக அவசியமான பராமரிப்பைப் பெறுவதற்குத் தகுதியுள்ள நோயாளிகளுக்காக KFHP/H நிதியுதவித் தகுதிச் சோதனைகள் செய்யப்பட்ட MFA திட்டத்தை மேற்கொண்டு வருகிறது.

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

**5.1 MFA பாலிசியின் கீழ் தகுதிபெறுகின்ற மற்றும் தகுதிபெறாத சேவைகள்**

**5.1.1 தகுதிபெறும் சேவைகள்.** MFA குறிப்பிட்ட (1) அவசரநிலை பராமரிப்பு உட்பட மருத்துவரீதியாக அவசியமான உடல்நல பராமரிப்பு சேவைகள்; (2) மருந்தக சேவைகள் மற்றும் தயாரிப்புகள்; மற்றும் (3) Kaiser Permanente (KP) மையங்களில் (எ.கா., மருத்துவமனைகள், மருத்துமனையின் உதவிபெறும் கிளினிக்குகள், மருத்துவ மையங்கள் மற்றும் மருத்துவ அலுவலகக் கட்டடங்கள்), KFHP/H வெளிநோயாளிகளுக்கு, அஞ்சல் ஆர்டர் மற்றும் சிறப்பு மருந்தகங்கள் அல்லது கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி KP வழங்குனர்களால் வழங்கப்பட்ட மருத்துவப் பொருட்கள்:

**5.1.1.1 மருத்துவரீதியாக அவசியமான சேவைகள்.** மருத்துவ நிலை தடுப்பு, மதிப்பீடு, நோயறிதல் அல்லது சிகிச்சைக்காகத் தேவைப்படுகின்ற மற்றும் முக்கியமாக நோயாளி அல்லது மருத்துவ பராமரிப்பு வழங்குனரின் வசதிக்காக அன்றி, KP வழங்குனரால் ஆர்டர் செய்யப்பட்ட அல்லது வழங்கப்பட்ட பராமரிப்பு, சிகிச்சை அல்லது சேவைகள்.

**5.1.1.2 பரிந்துரைகள் மற்றும் மருந்தகப் பொருட்கள்.** KFHP/H மருந்தகத்தில் வழங்கப்பட்ட, KP வழங்குனர்கள் மற்றும் ஒப்பந்த வழங்குனர்கள், KP அல்லாத அவசரநிலை துறை மற்றும் அவசரநிலை பராமரிப்பு வழங்குனர்கள், பல் மருத்துவத்துறை மருந்து மருத்துவர்கள் (DMD) மற்றும் பல் அறுவைசிகிச்சை

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

மருத்துவர்கள் (DDS) ஆகியோரால் எழுதப்பட்ட பரிந்துரைகள்.

**5.1.1.2.1 பொதுவின மருந்துகள்.** சாத்தியமுள்ள இடங்களிலெல்லாம் பொதுவின மருந்துகளைப் பயன்படுத்துதலுக்கு முன்னுரிமையளிக்கப்படுகிறது.

**5.1.1.2.2 பிராண்ட் மருந்துகள்.** KP வழங்குனரால் பரிந்துரைக்கப்பட்ட பிராண்ட் பெயருள்ள மருந்துகள் தகுதிபெறுவது:

**5.1.1.2.2.1** பரிந்துரையில் “எழுதப்பட்டபடி வழங்கவும்” (DAW) என்பது குறிப்பிடப்பட்டிருந்தால், அல்லது

**5.1.1.2.2.2** சமமான பொதுவின மருந்துகள் கிடைக்காதபோது.

**5.1.1.2.3 கடையில் வாங்கும் மருந்துகள் அல்லது மருந்தகம் தருபவை.** இந்தத் தயாரிப்புகள் தகுதிபெறுவது:

**5.1.1.2.3.1** KP வழங்குனர் பரிந்துரை அல்லது ஆர்டரை எழுதியிருக்கும்போது;

**5.1.1.2.3.2** உருப்படியானது KP மருந்தகத்தில் வழங்கப்படும்போது; மற்றும்

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

**5.1.1.2.3.3** உருப்படியானது KP மருந்தகத்தில் வழக்கமாகக் கிடைக்கும்போது.

**5.1.1.2.4 Medicare பயனாளிகள்.** மருந்தகத் தள்ளுபடி என்ற வடிவில் Medicare பகுதி D இன் கீழ் வரும் பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளுக்காக Medicare பயனாளிகளுக்குப் பொருந்துவது.

**5.1.1.2.5 பல் மருந்துகள்.** DMD அல்லது DDS ஆல் பரிந்துரைக்கப்பட்ட வெளிநோயாளி மருந்துகளானவை பல்மருத்துவ சிகிச்சை சேவைகளுக்கு மருத்துவரீதியில் அவசியமானவை என்றால் ஏற்றுக்கொள்ளக்கூடியவை ஆகும்.

**5.1.1.3 நீடித்து நிலைக்கும் மருத்துவ உபகரணம் (DME).** KP மையங்களில் தொடர்ந்து கிடைக்கின்ற மற்றும் மருத்துவ அவசிய அளவீட்டை பூர்த்திசெய்த நோயாளிக்கு KFHP/H ஆல் வழங்கப்பட்ட உபகரணம் வரையே பொருந்தக்கூடிய DME வரம்பிற்குட்படுத்தப்பட்டுள்ளது. DME வழிகாட்டுதல்களுக்கு ஏற்ப KP வழங்குனரால் DME ஆர்டர் செய்யப்பட வேண்டும்.

**5.1.1.4 Medicaid மறுக்கப்பட்ட சேவைகள்.** மாநில Medicaid திட்டத்திற்குள் இல்லாத ஆனால் மருத்துவரீதியாக அவசியமானது என தீர்மானிக்கப்பட்டு KP வழங்குனரால் ஆர்டர் செய்யப்பட்ட (எ.கா., பிறந்த குழந்தைக்கு

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

ஆண்குறி முன்தோல் நீக்கம், ஹெர்னியா சேவைகள், மருந்தாக்கியல் மருந்துக்கலவைகள், அறிகுறிகளுக்குச் சிகிச்சையளிப்பதற்கான மருந்துகள், மற்ற பிற.) மருத்துவ சேவைகள், பரிந்துரைகள், மருந்தகப் பொருட்கள் மற்றும் DME.

**5.1.1.5 உடல்நலக் கல்வி வகுப்புகள்.** நோயாளியின் பராமரிப்பு திட்டத்தின் ஒரு பகுதியாக KP வழங்குனரால் பரிந்துரைக்கப்பட்டு KP ஆல் திட்டமிடப்பட்டு வழங்கப்படுகின்ற வகுப்புகள்.

**5.1.1.6 விதிவிலக்கு அடிப்படையில் கிடைக்கும் சேவைகள்.** கீழே விளக்கப்பட்டுள்ள அதிக மருத்துவ செலவு தகுதி தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற, மருத்துவமனையில் இருந்து உள்நோயாளி பிரிவிற்கு அனுப்பி வைக்கப்படுவதற்கு வசதி தேவைப்படும் சேவைகள் மற்றும் பொருட்களைத் தேர்ந்தெடுப்பதற்கு, குறிப்பிட்ட விதிவிலக்கான சூழ்நிலைகளில் MFA பொருந்தக்கூடும், பிரிவு 5.6.2.ஐப் பார்க்கவும். நோயாளி அந்தத் தேவையைப் பூர்த்திசெய்தால், அதில் KP அல்லாத மையத்தில் வழங்கப்படும் திறமைமிக்க நர்சிங், இடைநிலை பராமரிப்பு மற்றும் காப்பக சேவைகள் ஆகியவை காப்பீட்டு சேவைகளில் அடங்கக்கூடும். பொருட்கள் என்பவற்றில் கீழே விளக்கப்பட்டுள்ளபடி ஒப்பந்ததாரர்/விற்பனையாளரால் வழங்கப்பட்ட DME பரிந்துரைத்தவை அல்லது KP வழங்குனர் ஆர்டர் செய்தவை அடங்கியிருக்கலாம்.

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

**5.1.1.6.1 திறமைமிக்க நர்சிங், இடைநிலை பராமரிப்பு மற்றும் காப்பக சேவைகள்.** மருத்துவமனையில் இருந்து உள்நோயாளி அனுப்பி வைக்கப்படுவதற்கு வசதி ஏற்படுத்தித் தருவதற்கு தேவைப்படும் பரிந்துரைக்கப்பட்ட மருந்துடன் நோயாளிக்கு ஒப்பந்த KP மையத்தால் வழங்கப்படுவது.

**5.1.1.6.2 நீடித்து நிலைக்கும் மருத்துவ உபகரணம் (DME).** DME வழிகாட்டுதல்களுக்கு ஏற்ப KP வழங்குனரால் ஆர்டர் செய்யப்பட்ட விற்பனையாளர் வழங்கிய மற்றும் KFHP/H DME துறை வழியாக ஒப்பந்த விற்பனையாளரால் வழங்கப்பட்ட DME.

**5.1.2 தகுதிபெறாத சேவைகள்.** MFA பொருந்தாத சூழல்கள்:

**5.1.2.1 KP வழங்குனரால் தீர்மானிக்கப்பட்டபடி அவசரமானவை அல்லது மருத்துவரீதியில் அவசியமானவை என்று கருதப்படாத சேவைகள்.** பின்வருவது, அவசரமானவை அல்லது மருத்துவரீதியில் அவசியமானவை அல்லாத சேவைகளின் உதாரணங்களுடைய முழுமையடையாத பட்டியல்:

**5.1.2.1.1** காஸ்மெடிக் அறுவை சிகிச்சை அல்லது சேவைகள், இதில் ஒரு நோயாளின் தோற்றத்தை

மேம்படுத்தும் நோக்கத்தையே முதன்மையாகக் கொண்ட தோல்மருத்துவ சேவைகளும் அடங்கும்.

**5.1.2.1.2** நோய் கண்டறிதல் உட்பட மகப்பேறின்மை சிகிச்சைகள் மற்றும் அது தொடர்பான சேவைகள்.

**5.1.2.1.3** சில்லறை மருந்துப் பொருட்கள்.

**5.1.2.1.4** அக்குபன்ச்சர், சைரோபிராக்டிக் மற்றும் மசாஜ் சேவைகள் உள்ளிட்ட மாற்று சிகிச்சைகள்.

**5.1.2.1.5** பாலியல் செயல்பாடின்மை சிகிச்சைக்கான ஊசிகள் மற்றும் சாதனங்கள்.

**5.1.2.1.6** வாடகைத்தாய் சேவைகள்.

**5.1.2.1.7** மூன்றாம் தரப்பினரின் பொறுப்பு, தனிப்பட்ட காப்பீட்டு பாதுகாப்பு அல்லது தொழிலாளர்கள் இழப்பீட்டு வழக்குகள் தொடர்புடைய சேவைகள்.

**5.1.2.1.8** **KP-அல்லாத உடல்நல காப்பீட்டுடன் நோயாளிகளுக்கான சேவைகள்.** விருப்பமான KP அல்லாத வழங்குனர்கள் மற்றும் மருந்தகங்களின் குறிப்பிட்ட நெட்வொர்க்கை நோயாளிகள் பயன்படுத்திக்கொள்ள வேண்டியுள்ள, நோயாளியின் KP அல்லாத உடல்நல காப்பீட்டின் கீழ் வருகின்ற அவசரநிலை இல்லாத

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

அல்லது அவசரம் தேவை இல்லாத சேவைகள் மற்றும் வெளிநோயாளி மருந்தகப் பொருட்கள்.

**5.1.2.2 அவசரமானவை அல்லது மருத்துவரீதியில் அவசியமானவை என்று கருதப்படாத மருந்து பரிந்துரைப்புகள் மற்றும் மருந்தகப் பொருட்கள்.** அவசரமானவை அல்லது மருத்துவரீதியில் அவசியமானவை என்று கருதப்படாத மருந்து பரிந்துரைப்புகள் மற்றும் மருந்தகப் பொருட்களில் அடங்குபவை, ஆனால் இவை மட்டுமல்ல:

**5.1.2.2.1** மருந்தக மற்றும் சிகிச்சைகள் குழுவால் அங்கீகரிக்கப்படாத மருந்துகள்.

**5.1.2.2.2** KP வழங்குனரால் பரிந்துரைக்கப்படாத அல்லது ஆர்டர் செய்யப்படாத கடையில் கேட்டு வாங்கும் மருந்துகள் மற்றும் பொருட்கள்.

**5.1.2.2.3** KP மருந்தகத்தில் வழக்கமாகக் கிடைக்காத மற்றும் பிரத்யேகமாக ஆர்டர் செய்யப்பட வேண்டியுள்ள கடையில் கேட்டு வாங்கும் மருந்துகள் மற்றும் பொருட்கள்.

**5.1.2.2.4** மூன்றாம் தரப்பினரின் பொறுப்பு, தனிப்பட்ட காப்பீட்டு பாதுகாப்பு அல்லது தொழிலாளர்கள் இழப்பீட்டு வழக்குகள் தொடர்புடைய பரிந்துரைகள்.

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

**5.1.2.2.5** குறிப்பிட்ட முறையில் சேர்க்கப்படாத மருந்துகள் (எ.கா., மகப்பேறு, காஸ்மெடிக், பாலியல் செயல்பாடின்மை).

**5.1.2.3 Low Income Subsidy (LIS) திட்டத்திற்கு தகுதியானவர்கள் மற்றும் பதிவுசெய்துள்ள Medicare பகுதி D பதிவாளர்களுக்கான பரிந்துரைகள்.** Centers for Medicare & Medicaid Services (CMS) என்பதன் வழிகாட்டுதல்களின்படி LIS திட்டத்திற்கு தகுதியுள்ள அல்லது பதிவுசெய்துள்ள Medicare Advantage பகுதி D பதிவாளர்களுக்கான பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளுக்கான மீதமுள்ள செலவின பங்கீடு.

**5.1.2.4 KP மையங்களுக்கு வெளியில் வழங்கப்படும் சேவைகள்.** KP மையங்கள் அல்லது KP வழங்குனர்களால் வழங்கப்படும் சேவைகளுக்கு மட்டுமே MFA பாலிசி பொருந்துகிறது.

**5.1.2.4.1** KP வழங்குனரின் பரிந்துரையின் பேரில் என்றாலும்கூட, மற்ற அனைத்து சேவைகளும் MFAக்குத் தகுதிபெறாதவையாகும்.

**5.1.2.4.2** KP அல்லாத மருத்துவ அலுவலகங்கள், அவசரநிலை பராமரிப்பு மையங்கள் மற்றும் அவசரகால மருத்துவத் துறைகள் மற்றும் KP அல்லாத வீட்டுச் சுகாதாரம், பராமரிப்பகம், மீட்புப் பராமரிப்பு மற்றும் காப்பக பராமரிப்பு சேவைகள்

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

ஆகியவற்றில் வழங்கப்படும் சேவைகள் மேலேயுள்ள பிரிவு 5.1.1.6 இன்படி விதிவிலக்கானவை என அடையாளம் காணப்பட்டால் தவிர நீக்கப்படக்கூடியவை.

**5.1.2.5 நீடித்து நிலைக்கும் மருத்துவ உபகரணம் (DME).** KP வழங்குனரால் ஆர்டர் செய்யப்பட்டதாக இருந்தாலும், பிரிவு 5.1.1.6 இன்படி விதிவிலக்கானவை என அடையாளம் காணப்பட்டால் தவிர ஒப்பந்த விற்பனையாளரால் வழங்கப்பட்ட DME நீக்கப்படக்கூடியதாகும்.

**5.1.2.6 போக்குவரத்து சேவைகள் மற்றும் பயணச் செலவுகள்.** நோயாளிகள் அவசரநிலை அல்லது அவசரநிலை அல்லாத போக்குவரத்து அல்லது பயணம் சம்பந்தப்பட்ட செலவுகளுக்குச் செலுத்த (எ.கா., தங்குமிடம் மற்றும் உணவு) MFA திட்டம் உதவுவதில்லை.

**5.1.2.7 உடல்நல பிரீமியம் திட்டங்கள்.** MFA திட்டமானது உடல்நல பராமரிப்பு காப்பீட்டுடன் தொடர்புடைய செலவுகளுக்குச் (எ.கா., தவணைகள் அல்லது பிரீமியம்கள்) செலுத்த நோயாளிகளுக்கு உதவுவதில்லை.

**5.1.3** தொடர்புடைய பிற்சேர்க்கையில் காணப்படும் பிரதேசத்திற்கே உரிய தகுதியுள்ள மற்றும் தகுதிபெறாத சேவைகள் மற்றும் தயாரிப்புகள் குறித்த கூடுதல் தகவல்கள். பார்க்கவும் *Kaiser Permanente பிரதேசங்களுக்கான பிற்சேர்க்கை, இணைப்புகள் 1-8.*

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

5.2 **வழங்குனர்கள்.** MFA கொள்கை பொருந்துகின்ற மருத்துவப் பராமரிப்பு வழங்குனர்களால் வழங்கப்பட்ட தகுதிபெற்ற சேவைகளுக்கு மட்டுமே MFA பாலிசி பயன்படுத்தப்படுகிறது. பார்க்கவும் *Kaiser Permanente பிரதேசங்களுக்கான பிற்சேர்க்கை, இணைப்புகள் 1-8*.

5.3 **திட்டத்தின் தகவல்கள் மூலாதாரங்கள் மற்றும் MFAக்கு விண்ணப்பிக்கும் முறை.** MFA திட்டம் குறித்த கூடுதல் தகவல்கள் மற்றும் விண்ணப்பிக்கும் முறை ஆகியவை தொடர்புடைய பிற்சேர்க்கையில் சுருக்கமாக வழங்கப்பட்டுள்ளன. பார்க்கவும் *Kaiser Permanente பிரதேசங்களுக்கான பிற்சேர்க்கை, இணைப்புகள் 1-8*.

5.3.1 **திட்டத்தின் தகவல்கள் மூலாதாரங்கள்.** MFA பாலிசியின் நகல்கள், விண்ணப்பப் படிவங்கள், அறிவுறுத்தல்கள் மற்றும் எளிமையாக விளக்கப்பட்ட சுருக்கங்கள் (எ.கா., பாலிசி சுருக்கங்கள் அல்லது திட்டத்தின் சிறுவெளியீடுகள்) ஆகியவை மின்னஞ்சல் மூலம், நேரடியாக அல்லது அமெரிக்க அஞ்சல் மூலம், KFHP/H இணையதளத்தில் கட்டணம் எதுவுமில்லாமல் பொதுமக்களுக்குக் கிடைக்கின்றன.

5.3.2 **MFAக்கு விண்ணப்பித்தல்.** MFA திட்டத்திற்கு விண்ணப்பிப்பதற்கு ஒரு நோயாளியானவர் KP சேவைகளுக்கான நிலுவையிலுள்ள மீதத்தொகைக்கான ரசீதினால் ஏற்பட்ட உடனடி தேவை, KP உடன் திட்டமிட்ட சந்திப்பு அல்லது மேலே குறிப்பிட்டுள்ளபடி தகுதிபெற்ற சேவைகளுக்காக KP வழங்குனரால் ஆர்டர் செய்யப்பட்ட ஒரு மருந்தக பரிந்துரைச் சீட்டை காட்டியாக வேண்டும். ஆன்லைனில், நேரடியாக, தொலைபேசி வழியாக அல்லது காகித விண்ணப்பம் மூலம் ஆகியவை உட்பட ஒரு நோயாளி MFA திட்டத்திற்கு விண்ணப்பிக்க பல வழிகள் உள்ளன.

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

**5.3.2.1 KP MFA திட்டம்.** நோயாளிகள் KP இல் சேவைகளைப் பெறுகின்ற KP சேவை பகுதியிலேயே MFA திட்டத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

**5.3.2.2 பொது மற்றும் தனியார் திட்டத்திற்கு தகுதிபெறுவதற்கான நோயாளிகள் தகுதி காணல்.** உடல்நல சேவைகளுக்கான அணுகல், ஒட்டுமொத்த தனிப்பட்ட உடல்நலன் மற்றும் நோயாளியின் சொத்துகளுடைய பாதுகாப்பிற்கு என உடல்நல காப்பீட்டை பெறுவதற்கு அனைத்து தனிநபர்களையும் KFHP/H ஊக்கப்படுத்துகிறது. உடல்நல பலன் மாற்றக்கத்தில் கிடைக்கின்ற Medicaid மற்றும் காப்பீடு உட்பட கிடைக்கின்ற உதவித் திட்டங்களுக்கு அடையாளம் காணப்பட்டு விண்ணப்பிக்க காப்பீடு செய்யாத நோயாளிகள் அல்லது அவர்களுக்கு உத்தரவாதமளிப்போருக்கு KFHP/H உதவும். உடல்நல பலன் மாற்றக்கத்தில் கிடைக்கின்ற Medicaid மற்றும் காப்பீட்டிற்குத் தகுதியுள்ளவராகக் கருதப்படும் நோயாளி அந்தத் திட்டங்களுக்கு விண்ணப்பிக்கலாம். Medicaid வருமானத் தகுதிநிலை தேவைகளை விட அதிகமான நிதிநிலை தகுதியுள்ள நோயாளிகள் Medicaidக்கு விண்ணப்பிக்க வேண்டாம்.

**5.4 MFAக்கு விண்ணப்பிக்கத் தேவையான தகவல்கள்.** MFA திட்டத்திற்கான தகுதிநிலை மற்றும் உடல்நல பலன் மாற்றக்கத்தில் கிடைக்கும் Medicaid மற்றும் மானியமுள்ள காப்பீடு ஆகியவற்றுக்கான தகுதிநிலையைத் தீர்மானிக்க நோயாளியின் நிதி

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

நிலையை சரிபார்ப்பதற்கு முழுமையான தனிப்பட்ட, நிதிசார்ந்த மற்றும் பிற தகவல்கள் தேவைப்படுகின்றன. நோயாளி உதவிக்காக விண்ணப்பின்ற ஒவ்வொரு முறையும் நோயாளியின் நிதி நிலை சரிபார்க்கப்படுகிறது.

**5.4.1 நிதிநிலை தகவல்களை வழங்குதல்.** நோயாளிகள் தங்களுடைய MFA விண்ணப்பத்துடன் வீட்டின் அளவு மற்றும் வீட்டு வருமானத் தகவல்களை சேர்க்க வேண்டும், இருப்பினும், KP ஆல் குறிப்பிட்டு கேட்கப்பட்டால் தவிர நிதிநிலை சரிபார்ப்பை அனுமதிக்க நிதிநிலை ஆவணங்களைச் சமர்ப்பிப்பது விருப்பத்தேர்வானதாகும்.

**5.4.1.1 நிதிநிலை அறிக்கைகள் இல்லாமல் நிதிநிலையை சரிபார்த்தல்.** நிதிநிலை ஆவணமாக்கல் MFA விண்ணப்பத்தில் சேர்க்கப்படவில்லை என்றால், நோயாளியின் நிதிநிலையானது வெளிப்புற தரவு மூலங்களைப் பயன்படுத்தி சரிபார்க்கப்படும். வெளிப்புற தரவு மூலங்களைப் பயன்படுத்தி நோயாளியின் நிதிநிலையை சரிபார்க்க முடியவில்லை என்றால், அவர்களுடைய நிதிநிலையை சரிபார்க்க அனுமதிப்பதற்கு MFA திட்ட விண்ணப்பத்தில் விளக்கப்பட்டுள்ள நிதி ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு நோயாளியிடம் கேட்டுக்கொள்ளப்படலாம்.

**5.4.1.2 நிதி ஆவணமாக்கல் மூலம் நிதிநிலையை சரிபார்த்தல்.** நிதி ஆவணமாக்கலானது MFA விண்ணப்பத்துடன்

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

இணைக்கப்பட்டிருந்தால், தகுதிநிலையானது வழங்கப்பட்ட தகவல்களைப் பொறுத்து அமையும்.

**5.4.2 முழுமையான தகவல்களை வழங்குதல்.** MFA திட்ட தகுதிநிலையானது தேவையான தனிப்பட்ட, நிதி மற்றும் பிற தகவல்கள் பெறப்பட்டதும் தீர்மானிக்கப்படும்.

**5.4.3 முழுமையற்ற தகவல்கள்.** பெறப்பட்டுள்ள தேவையான தகவல்கள் முழுமையற்றதாக இருந்தால் அதுகுறித்து ஒரு நோயாளிக்கு நேரடியாக, மின்னஞ்சல் மூலம் அல்லது தொலைபேசி வழியாகத் தெரிவிக்கப்படும். நோயாளியானவர் தவறவிட்ட தகவல்களை 30 நாட்களுக்குள் இவற்றில் ஏதாவது ஒன்றிற்குள் சமர்ப்பிக்கலாம்: அறிவிப்பு அஞ்சல் செய்யப்பட்ட தேதியிலிருந்து, நேரடி உரையாடல் நடைபெற்றதிலிருந்து அல்லது தொலைபேசி வழி உரையாடலில் இருந்து. முழுமையற்ற தகவல்களின் காரணமாக MFA மறுக்கப்படலாம்.

**5.4.4 தேவையான தகவல்கள் கிடைக்கவில்லை.** திட்ட விண்ணப்பத்தில் விளக்கப்பட்டுள்ள தேவையான தகவல்கள் இல்லாத ஒரு நோயாளியானவர் தகுதிநிலையை நிரூபிப்பதற்குக் கிடைக்கக்கூடிய மற்ற ஆவணங்கள் குறித்து ஆலோசிக்க KFHP/Hஜ தொடர்புகொள்ளலாம்.

**5.4.5 நிதிநிலை தகவல்கள் எதுவும் இல்லை.** ஒரு நோயாளி குறைந்தபட்சம் அடிப்படையான நிதிநிலை தகவல்களை (எ.கா., வருமானம், எதுவாகினும், அதன் மூலம்) வழங்க வேண்டும் என்பதுடன் பின்வரும் நிலைகளின்போது சான்றளிக்க வேண்டும்: (1) அவர்களுடைய நிதிநிலையை வெளிப்புற தரவு மூலங்களைப்

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

பயன்படுத்தி சரிபார்க்க முடியாதபோது; (2) தேவையான நிதிநிலை தகவல்கள் கிடைக்காதபோது; மற்றும் (3) தகுதிநிலையை நிரூபிக்கின்ற வேறு எந்த ஆவணமாக்கலும் இல்லாதபோது. பின்வருவனவற்றுள் ஏதேனும் பொருந்தும் என்றால் நோயாளியிடமிருந்து அடிப்படை நிதிநிலை தகவல்களும் சான்றளிப்பும் தேவைப்படுகிறது:

**5.4.5.1** நோயாளி வீடற்றவர் அல்லது வீடற்றோர் கிளினிக்கில் பராமரிப்பு பெறுபவர்.

**5.4.5.2** நோயாளிக்கு வருமானம் எதுவுமில்லை, தங்களுடைய பணி வழங்குனரிடமிருந்து வழக்கமான ஊதியம் பெறுவதில்லை (சுய-வேலைவாய்ப்புள்ளவர்கள் தவிர), பணப் பரிசுகளைப் பெறுவதில்லை அல்லது முந்தைய வரி ஆண்டில் உள்நாட்டு அல்லது மாநில வருமான வரி அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டியிருக்கவில்லை.

**5.4.5.3** நோயாளியானவர் நன்கு தெரிந்த தேசிய அல்லது பிரதேச பேரிடர் அல்லது பொது உடல்நலன் அவசரநிலையால் பாதிக்கப்பட்டிருப்பவர் (கீழேயுள்ள பிரிவு 5.11ஐ பார்வையிடவும்).

**5.4.6** **நோயாளி ஒத்துழைப்பு.** தேவையான அனைத்து தகவல்களையும் வழங்குவதற்கு ஒரு நோயாளி நியாயமான முயற்சி எடுக்க வேண்டும். தேவையான அனைத்து தகவல்களும் வழங்கப்படவில்லை என்றால், தகுதிநிலையை தீர்மானிக்கும்போது சூழ்நிலைகள் கருத்தில் கொள்ளப்படலாம்.

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

**5.5 உத்தேசமான தகுதிநிலை தீர்மானித்தல்.** நோயாளிக்கு நிலுவைத்தொகை இருக்கின்ற, KP தொடர்புகொள்ள முயற்சிப்பதற்கு பதிலளிக்காமல் இருக்கின்ற மற்றும் விண்ணப்பிக்கவில்லை என்றாலும் மற்ற கிடைக்கின்ற தகவல்கள் நிதிவகையில் சிரமம் என்பதை உறுதிப்படுத்துகின்ற சூழ்நிலைகளில் விண்ணப்பம் நிறைவுசெய்யப்படவில்லை என்றாலும் நிதியுதவி அனுமதிக்கப்படலாம். தகுதியுள்ளவர் என்று தீர்மானிக்கப்பட்டால், நோயாளி தனது தனிப்பட்ட, நிதிசார்ந்த அல்லது பிற தகவல்களை நிதிநிலையை சரிபார்க்க வழங்க வேண்டியதில்லை என்பதுடன் அவருக்கு தாமாகவே MFA வழங்கப்படும். உத்தேசமான தகுதிநிலை தீர்மானித்தலுக்கான காரணம் மற்றும் ஆதரவான தகவல்கள் நோயாளியின் கணக்கில் ஆவணப்படுத்தப்பட்டு, கூடுதல் நோயாளி குறிப்புகள் சேர்க்கப்படலாம். நோயாளியானவர் முன்னதாகவே தகுதிபெற்று அல்லது நிதிவகையில் சிரமப்படுவதற்கான அறிகுறிகள் இருந்தால் அவர் தகுதிபெற்றவராக உத்தேசிக்கப்பட்டு, ஆவணத்திற்கான தேவைகளுக்கு விலக்களிக்கப்படும்.

**5.5.1 முன் தகுதி.** நோயாளி பதிவுசெய்யப்பட்டிருப்பது அல்லது கீழே குறிப்பிட்டுள்ளபடி பொது மற்றும் தனியார் உதவித் திட்டங்களுக்குத் தகுதிபெறுவதற்கான நிதிநிலை தகுதிகாணல் செயல்முறையால் தீர்மானிக்கப்பட்டிருப்பதற்கான ஆதாரம் இருக்கின்ற சூழ்நிலைகளில் அவர் MFA திட்டத்திற்கு தகுதியுள்ளவராக உத்தேசிக்கப்படுகிறார் (அதாவது, முன்தகுதி பெறுகிறார்). பின்வரும் வரன்முறைகளில் எதையேனும் நோயாளி பூர்த்திசெய்பவராக இருந்தால் அவர் முன்தகுதி பெற்றவராகக் கருதப்படுகிறார்:

**5.5.1.1** இவற்றின் வழியாக நோயாளிகள் பரிந்துரைக்கப்பட்டு முன்தகுதி பெறுவதற்கு சமூக MFA (CMFA) திட்டத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பது: (1) உள்நாட்டு, மாநில அல்லது உள்ளூர் நிர்வாகம், (2) கூட்டாளராகவுள்ள சமூகம்-சார்ந்த அமைப்பு, அல்லது (3) ஒரு KFHP/H ஸ்பான்சர் செய்த சமூக உடல்நலன் நிகழ்வில்.

**5.5.1.2** குறைந்த வருமானமுள்ள நோயாளிகளைப் பராமரிப்பதற்கான அணுகலுக்கு ஆதரவாக வடிவமைக்கப்பட்ட KP சமூக பயன் திட்டத்தில் பதிவுசெய்திருப்பது மற்றும் KFHP/H பணியாளராக நியமிக்கப்பட்டவரால் முன்தகுதி பெற்றவராக இருப்பது.

**5.5.1.3** பதிவு செய்துள்ள அல்லது நம்பத்தகுந்த நிதியுதவித் தகுதிச் சோதனை காப்பீடு திட்டத்தில் தகுதிபெற்றவராக உத்தேசிக்கப்படுபவராக இருப்பது (எ.கா., Medicaid, Medicare Low Income Subsidy திட்டம், உடல்நல பலன் பரிமாற்றகத்தில் கிடைக்கும் மானியமளிக்கப்பட்ட காப்பீடு).

**5.5.1.4** நம்பத்தகுந்த நிதியுதவித் தகுதிச் சோதனைகள் செய்யப்பட்ட பொது உதவித் திட்டத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பது (எ.கா., பெண்கள், குழந்தைகள் மற்றும் சிறார் திட்டங்கள், துணைநிலை ஊட்டச்சத்து மற்றும் உதவித் திட்டங்கள், குறைந்த-வருமானமுள்ள குடும்ப ஆற்றல் உதவித் திட்டங்கள், இலவசமான அல்லது விலை குறைக்கப்பட்ட செலவில் மதிய உணவு திட்டங்கள்).

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

**5.5.1.5** குறைவான வருமானம் கொண்ட அல்லது மானியத்தில் வழங்கிய வீட்டில் வசிப்பது.

**5.5.1.6** கடைசி 30 நாட்களுக்குள் தொடங்கிய MFA ஒதுக்கீடு முன்னதாக வழங்கப்பட்டிருப்பது.

**5.5.2 நிதிவகையில் சிரமப்படுவதற்கான ஆதாரங்கள்.** ஒரு KP மையத்தில் பராமரிப்பைப் பெறுகின்ற நோயாளி மற்றும் நிதிவகையில் சிரமப்படுகிறவர்கள் (எ.கா., கடந்தகால நிலுவையில் உள்ள மீதங்கள் அல்லது செலுத்துவதற்கான திறனின்மை) திட்டத்தில் தகுதிபெறுவதற்கு KP ஆல் ஆய்வு செய்யப்படலாம் என்பதுடன் நிதிவகையில் சிரமப்படுவதற்கு வெளிப்புற தரவு மூலங்கள் பயன்படுத்தப்படலாம். தகுதி இருக்கிறதென்றால், தகுதியுள்ள நிலுவையிலுள்ள தொகைகளுக்காக மட்டும் MFA ஒதுக்கீட்டை நோயாளி பெறுவார்.

**5.5.2.1 KP ஆல் தீர்மானிக்கப்படும் தகுதிநிலை.** நோயாளிகளின் நிலுவையிலுள்ள தொகைகள் கடன் வசூலிப்பு நிறுவனங்களிடம் வழங்கப்படும் முன்னரே திட்டத்திற்கான தகுதிக்கு அவர்களை KP ஆய்வு செய்யலாம்.

**5.5.2.1.1 நிலுவையிலுள்ள சுய-செலுத்தல் தொகைகள்.** நோயாளிகளின் நிலுவையிலுள்ள தொகைகள் கடன் வசூலிப்பு நிறுவனங்களிடம் வழங்கப்படுவதற்காக அடையாளம் காணப்பட்டுள்ள, நிதியுதவித் தகுதிச் சோதனைகள் அடிப்படையில் திட்டத்திற்கான தகுதிக்கு அவர்களை KP ஆய்வு செய்யலாம். கீழே பிரிவு 5.6.1ஐப் பார்க்கவும்.

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

**5.5.2.1.2 நிதிவகையில் சிரமப்படுவதற்கான ஆதாரங்கள்.** நிலுவையில் உள்ள தொகைகள் கொண்டுள்ள சில நோயாளிகளுக்கான நிதிசார்ந்த தகவல்கள் தகுதியைத் தீர்மானிப்பதற்கு கிடைக்காமல் போகலாம், ஆனால் KPக்குத் தெரிய வருகின்ற நிதிவகை சிரமத்தின் பிற குறைவான வருமான ஆதாரத்தைத் தீர்மானிக்க வழிவகுக்கலாம். தகுதியுள்ள நிலுவை தொகைகள் MFA திட்டத்திற்கு பொருந்தும் என்பதுடன் மேற்கொண்டு வசூலிப்பு நடவடிக்கைகளுக்கு உள்ளாகாது. நிதிவகை சிரமத்தின் அறிகுறிகளில் பின்வருபவையும், இவை மட்டுமே அல்லாதவையும் அடங்கும்:

**5.5.2.1.2.1** நோயாளியானவர் ஸ்பான்சர்ஷிப், சமூகப் பாதுகாப்பு எண், வரி ஆவணங்கள் அல்லது சரியான ரசீதுக்குரிய முகவரிகள் இல்லாத அமெரிக்கரல்லாத குடிமகன்; தங்களுடைய கணக்கு குறித்து KPயிடம் தெரிவிக்காதவர்; அத்துடன் நோயாளியானவர்

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

தன்னுடைய சொந்த நாட்டில் நிதிவகையிலோ சொத்துவகையிலோ எந்த மூலாதாரமும் இல்லாதவர் என்பதை நியாயப்படியான வசூலிப்பு முயற்சிகள் காட்டுகின்றன.

**5.5.2.1.2.2** நோயாளியானவர் முன்னதாக வழங்கப்பட்ட KP சேவைகளுக்கான தொகைகளை நிலுவையில் வைத்துள்ளார் என்பதுடன் நீண்டகாலத்திற்குச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்; திருமணமாகாதவர்; வருமானத்திற்கான எந்த ஆதாரமும் இல்லை; அத்துடன் KP ஆல் அந்த நோயாளியை தொடர்புகொள்ள முடியவில்லை.

**5.5.2.1.2.3** நோயாளியானவர் எந்தவித எஸ்டேட்/ சொத்துகளும் இல்லாமல் இறந்தவர் அல்லது கடன்களுக்குப்

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

பொறுப்பேற்கும் உறவினர் யாரும் இல்லாதவர்.

**5.5.2.1.2.4** நோயாளி இறந்துவிட்டதாக, உயில் அல்லது எஸ்டேட் திவாலானதாக என காட்டுகிறது.

**5.6 திட்டத்திற்குத் தகுதிபெறும் வரன்முறை.** குறிப்பிட்ட பிரதேச பிற்சேர்க்கையின் பிரிவு V இல் குறிப்பிட்டுள்ளபடி, MFAக்கு விண்ணப்பிக்கும் நோயாளியானவர் நிதியுதவி தகுதிச் சோதனை அல்லது உயர் மருத்துவ செலவுகள் வரன்முறை அடிப்படையிலான நிதி உதவிகளுக்குத் தகுதிபெறலாம். பார்க்கவும் *Kaiser Permanente பிரதேசங்களுக்கான பிற்சேர்க்கை, இணைப்புகள் 1-8*.

**5.6.1 நிதியுதவி தகுதிச் சோதனை வரன்முறை.** நோயாளியானவர் நிதியுதவி தகுதிச் சோதனை வரன்முறையை பூர்த்தி செய்பவரா என்பதற்கு அவர் மதிப்பிடப்படுகிறார்.

**5.6.1.1 வருமான அளவின் அடிப்படையில் தகுதிநிலை.** உள்நாட்டு ஏழ்மை வழிகாட்டல்கள் (FPG) இன் சதவிகிதமாக KFHP/H இன் நிதியுதவி தகுதிச் சோதனை வரன்முறையைக் காட்டிலும் குறைவாக அல்லது அதற்குச் சமமான நிகர குடும்ப வருமானம் கொண்ட ஒரு நோயாளியானவர் நிதி உதவிக்குத் தகுதிபெற்றவராவார். நிதியுதவி தகுதிச் சோதனையில் சொத்துகள் கருத்தில் கொள்ளப்படுவதில்லை.

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

**5.6.1.2 குடும்ப வருமானம்.** வருமானத் தேவைகளானவை குடும்ப உறுப்பினர்களுக்கும் பொருந்தும். ஒரு குடும்பம் என்பது ஒற்றை தனிநபர் அல்லது பிறப்பு, திருமணம் அல்லது ஒன்றாக வசிக்கும் தத்தெடுப்பு மூலம் தொடர்புகொண்டிருக்கின்ற இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட குழுவினர் ஆகும். குடும்ப உறுப்பினர்களில் வாழ்க்கைத் துணையர்கள், தகுதிபெற்ற வீட்டு கூட்டாளர்கள், குழந்தைகள், பராமரிப்பாளர் உறவினர்கள், பராமரிப்பாளர் உறவினர்களின் குழந்தைகள் மற்றும் அந்த வீட்டில் வசிக்கின்ற ஒற்றை தனிநபர், வாழ்க்கைத் துணையர், வீட்டு கூட்டாளர் அல்லது பெற்றோருக்கு நிதிவகையில் பொறுப்பேற்கின்ற மற்ற தனிநபர்கள் ஆகியோர் அடங்குவர்.

**5.6.2 உயர் மருத்துவ செலவின வரன்முறை.** நோயாளியானவர் உயர் மருத்துவ செலவின தகுதிநிலை வரன்முறையை பூர்த்தி செய்பவரா என்பதற்கு அவர் மதிப்பிடப்படுகிறார்.

**5.6.2.1 உயர் மருத்துவ செலவினங்கள் அடிப்படையில் தகுதி.** விண்ணப்பிப்பதற்கு முந்தைய 12 மாதத்திற்கும் மேற்பட்ட காலகட்டத்தில் தகுதியுள்ள சேவைகளுக்காக மருத்துவ மற்றும் மருந்தகச் செலவுகளுக்கு தன்னுடைய சொந்தப் பணத்தில் நிகர குடும்ப வருமானம் அளவிற்கு செய்திருக்கும் செலவானது வருடாந்தர குடும்ப வருமானத்தைக் காட்டிலும் அதிகமாக அல்லது 10%க்குச் சமமாக இருந்தால் நிதி உதவிக்குத் தகுதிபெறும்.

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

**5.6.2.1.1 KFHP/H சொந்தப் பணத்தில் செலவு.** தகுதியுள்ள சேவைகளுடன் தொடர்புடைய முன்பணம், டெபாசிட்கள், கூட்டுக்காப்புறுதி மற்றும் பிடித்தங்கள் உட்பட KP மையங்களில் செலவிட்ட மருந்து மற்றும் மருந்தகச் செலவினங்கள்.

**5.6.2.1.2 KFHP/H-அல்லாத சொந்தப் பணத்தில் செலவு.** மருத்துவரீதியாக அவசியமான சேவைகளுடன் தொடர்புடைய KP-அல்லாத மையங்களில் வழங்கப்பட்ட மருத்துவ, மருந்தக மற்றும் பல்சிகிச்சை செலவினங்கள் மற்றும் நோயாளி ஏற்றுக்கொண்டவை (ஏதேனும் தள்ளுபடிகள் அல்லது கழிவுகள் நீங்கலாக) சேர்க்கப்பட்டுள்ளன. KP-அல்லாத மையங்களில் பெற்றுக்கொண்ட சேவைகளுக்கான மருத்துவ செலவினங்களின் ஆவணமாக்கலை நோயாளி வழங்க வேண்டும்.

**5.6.2.1.2.1** கட்டணங்களை ஏற்றுக்கொள்ளும் KFHP/H-அல்லாத வழங்குனரானவர் நோயாளி தகுதிபெறக்கூடிய நிதி உதவி திட்டத்தை வழங்கும்போது,

கட்டணங்களுக்கு முன்னரே நோயாளிகள் விண்ணப்பித்திருப்பதானது தகுதியுள்ள மருத்துவ செலவினமாகக் கருதப்படும்.

**5.6.2.1.3 உடல்நல பிரீமியம் திட்டங்கள்.** சொந்தச் செலவுகள் என்பது உடல்நல பராமரிப்பு காப்பீட்டுடன் சம்பந்தப்பட்டிருக்கும் செலவுகளுக்கு (எ.கா., தவணைகள் அல்லது பிரீமியம்கள்) அப்பாற்பட்ட சொந்தச் செலவுகளாகும்.

## 5.7 மறுப்புகளும் முறையீடுகளும்

**5.7.1 மறுப்புகள்.** MFA திட்டத்திற்கு விண்ணப்பித்திருக்கும் ஒரு நோயாளியானவர் தகுதிநிலை வரன்முறையை பூர்த்தி செய்யாதபோது அவருடைய MFA கோரிக்கை மறுக்கப்படுவதாக அவருக்கு எழுத்துப்பூர்வமாகத் தெரிவிக்கப்படும்.

**5.7.2 MFA மறுப்பிற்கு எவ்வாறு மேல்முறையீடு செய்யலாம்.** MFA மறுக்கப்பட்ட நோயாளிகள் அல்லது அனுமதிக்கப்பட்டும், தாங்கள் உயர் MFA ஒதுக்கீட்டிற்குத் தகுதியுள்ளவர்கள் என்று கருதுவோர் இந்த முடிவை எதிர்த்து முறையிடலாம். பின்வரும் நிலையில் நோயாளிகள் முறையீடு செய்ய ஊக்கப்படுத்தப்படுகிறார்கள்: (1) முன்னதாக நிதிநிலை ஆவணமாக்கலை சமர்ப்பிக்காதவர்கள் அல்லது (2) குடும்ப வருமானத்தில் மாற்றம் ஏற்பட்டிருப்பது. முறையீட்டு செயலாக்கத்தை

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

நிறைவுசெய்வதற்கான அறிவுறுத்தல்கள் MFA மற்றும் அனுமதி கடிதங்கள் மற்றும் MFA இணையதளத்திலும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. நிர்ணயிக்கப்பட்ட KFHP/H அலுவலர்களால் முறையீடுகள் மதிப்பாய்வு செய்யப்படுகின்றன. நோயாளிக்கு அவர்களுடைய முறையீடுகளின் முடிவு எழுத்துப்பூர்வமாகத் தெரிவிக்கப்படுகிறது. அனைத்து முறையீட்டு முடிவுகளும் இறுதியானவை.

**5.8 ஒதுக்கீட்டு அமைப்பு.** MFA ஒதுக்கீடுகளானவை தகுதியுள்ள கடந்தகால நிலுவை அல்லது நிலுவையிலுள்ள தொகைகள், கடன் வசூலிப்பு நிறுவனங்களிடம் தரப்பட்ட மீதத்தொகைகள் மற்றும் நிலுவையிலுள்ள கட்டணங்களுக்குப் பொருந்தும். MFA ஒதுக்கீடுகளில் KP வழங்குனரால் தீர்மானிக்கப்பட்டபடி தேவையான பின்தொடர்தல் சேவைகளுக்கான தகுதிநிலை காலகட்டமும் அடங்கியிருக்கலாம்.

**5.8.1 ஒதுக்கீட்டின் அடிப்படை.** MFA திட்டத்தால் செலுத்தப்பட்ட நோயாளியின் செலவானது நோயாளி வைத்திருக்கும் உடல்நல பராமரிப்பு காப்பீடு மற்றும் நோயாளியின் குடும்ப வருமானத்தைப் பொறுத்துத் தீர்மானிக்கப்படுகிறது.

**5.8.1.1 உடல்நல பராமரிப்பு காப்பீடு இல்லாமல் MFA-தகுதிபெற்ற நோயாளி (காப்பீடு செய்யாதவர்).** ஒரு தகுதியுள்ள காப்பீடு செய்யாத நோயாளியானவர் அனைத்து தகுதியுள்ள நோயாளி செலவின் மீதும் தள்ளுபடி பெறுகிறார்.

**5.8.1.2 உடல்நல பராமரிப்பு காப்பீடு உள்ள MFA-தகுதிபெற்ற நோயாளி (காப்பீடு செய்தவர்).** ஒரு தகுதியுள்ள காப்பீடு செய்த நோயாளியானவர் அனைத்து

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

தகுதியுள்ள நோயாளி செலவின் மீதும் தள்ளுபடி பெறுகிறார், அது (1) நோயாளி தனிப்பட்ட முறையில் பொறுப்பேற்பவர் மற்றும் (2) அவருடைய காப்பீட்டு நிறுவனத்தால் பணம் வழங்கப்படாதவர். காப்பீட்டில் அடங்காத ரசீதின் பகுதியைத் தீர்மானிப்பதற்கு நோயாளியானவர் பலன்களின் விளக்கம் (EOB) என்பது போன்ற ஆவணமாக்கலை வழங்க வேண்டும். ஒரு தகுதியுள்ள காப்பீடு செய்த நோயாளியானவர், எந்தவித மறுக்கப்பட்ட உரிமைகோரல்களுக்கும். தன்னுடைய காப்பீட்டு நிறுவனத்தின் முறையீட்டு மறுப்பின் ஆவணமாக்கலை தகுதியுள்ள காப்பீடு செய்துள்ள நோயாளிகள் வழங்க வேண்டும்.

5.8.1.2.1 **காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து பெற்ற பேமெண்ட்டுகள்.** ஒரு தகுதியுள்ள காப்பீடு செய்த நோயாளியானவர் காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து பெற்ற, KFHP/H ஆல் வழங்கப்பட்ட சேவைகளுக்கான எந்த பேமெண்ட்டுகளுக்காகவும் KFHP/H இடம் கையொப்பமிட வேண்டும்.

5.8.1.3 **தள்ளுபடி அட்டவணை.** medical financial assistanceக்குத் தகுதிபெற்ற ஒரு நோயாளிக்கு KP விதித்துள்ள கட்டணங்களின் தொகைகள் இந்தத் திட்டத்திற்கு நோயாளி தகுதிபெறுவதற்குப் பயன்படுத்தப்பட்ட தகுதிநிலை வரன்முறையின் அடிப்படையில் அமைந்திருக்கும். இந்தப் பாலிசியின் கீழ்

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

கிடைக்கும் தள்ளுபடிகள் குறித்த கூடுதல் தகவல்கள் தொடர்புடைய பிற்சேர்க்கையில் சுருக்கமாக அளிக்கப்பட்டுள்ளன. பார்க்கவும் *Kaiser Permanente பிரதேசங்களுக்கான பிற்சேர்க்கை, இணைப்புகள் 1-8*.

**5.8.1.3.1 உத்தேசமான தகுதிநிலை தீர்மானித்தல் – முன்தகுதி.** MFA தகுதிநிலைக்கு முன்தகுதி பெற்ற ஒரு நோயாளியானவர் (பிரிவு 5.5.1 இல் சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளபடி) நோயாளியின் செலவு அல்லது நோயாளியின் பொறுப்பிற்குரியவற்றுக்கு வழங்கப்பட்ட சேவைகளுக்கான கட்டணங்களுக்கு 100% MFA தள்ளுபடி பெறலாம்.

**5.8.1.3.2 KP ஆல் உத்தேசமான தகுதிநிலை தீர்மானித்தல் – நிலுவையிலுள்ள சுயமாகச் செலுத்தும் தொகைகள்.** நிதியுதவித் தகுதிச் சோதனை வரன்முறையை பூர்த்திசெய்கின்ற ஒரு நோயாளியானவர் நோயாளியின் செலவு அல்லது நோயாளியின் பொறுப்பிற்குரியவற்றுக்கு வழங்கப்பட்ட சேவைகளுக்கான கட்டணங்களுக்கு மாறுபடும் அளவிலான MFA தள்ளுபடி பெறலாம்.

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

**5.8.1.3.3 KP ஆல் உத்தேசமான தகுதிநிலை தீர்மானித்தல் – நிதிவகையில் சிரமத்தில் இருப்பதற்கான சான்றுகள்.** நிதிவகையில் சிரமத்தில் இருப்பதன் சான்றுகளைப் பூர்த்தி செய்யும் ஒரு நோயாளியானவர் நோயாளியின் செலவு அல்லது நோயாளியின் பொறுப்பிற்குரியவற்றுக்கு வழங்கப்பட்ட சேவைகளுக்கான கட்டணங்களுக்கு 100% MFA தள்ளுபடி பெறலாம்.

**5.8.1.3.4 நிதியுதவித் தகுதிச் சோதனை வரன்முறையை பூர்த்திசெய்கின்ற நோயாளி.** நிதியுதவித் தகுதிச் சோதனை வரன்முறையை பூர்த்திசெய்கின்ற ஒரு நோயாளியானவர் நோயாளியின் செலவு அல்லது நோயாளியின் பொறுப்பிற்குரியவற்றுக்கு வழங்கப்பட்ட சேவைகளுக்கான கட்டணங்களுக்கு மாறுபடும் அளவிலான MFA தள்ளுபடி பெறலாம்.

**5.8.1.3.5 உயர் மருத்துவச் செலவுகள் வரன்முறையை பூர்த்திசெய்கின்ற நோயாளி.** உயர் மருத்துவச் செலவுகள் வரன்முறையை பூர்த்திசெய்கின்ற ஒரு நோயாளியானவர் நோயாளியின் செலவு

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

அல்லது நோயாளியின் பொறுப்பிற்குரியவற்றுக்கு வழங்கப்பட்ட சேவைகளுக்கான கட்டணங்களுக்கு 100% MFA தள்ளுபடி பெறலாம்.

**5.8.1.4 செட்டில்மெண்ட்களைப் பெறுதல்.** KFHP/H மூன்றாம் தரப்பு பொறுப்பு / தனிப்பட்ட காப்பீட்டு பாதுகாப்பு செட்டில்மெண்ட்கள், பணம் செலுத்துபவர்கள் அல்லது பிற சட்டப்பூர்வமாகப் பொறுப்புடைய தரப்பினரிடமிருந்து, பொருந்தக்கூடிய வகையில், ஈடுசெய்தல்களை நாடுகிறது.

**5.8.2 ஒதுக்கீடு தகுதி காலகட்டம்.** பின்தொடர் சேவைகளுக்கான தகுதிநிலை காலகட்டமானது அனுமதிக்கப்பட்ட தேதி அல்லது சேவைகள் வழங்கப்பட்ட தேதி அல்லது மருந்துகள் வழங்கப்பட்ட தேதியிலிருந்து தொடங்குகிறது. தகுதிநிலை காலகட்டத்தின் காலஅளவு என்பது குறிப்பிட்ட காலம் மட்டுமே என்பதுடன் பின்வருபவை உட்பட பல்வேறு வழிமுறைகளில் KP இன் விருப்புரிமையின்படி தீர்மானிக்கப்படுகிறது:

**5.8.2.1 குறிப்பிட்ட கால அளவு.** தகுதியுள்ள பின்தொடர் சேவைகள் மற்றும் வாராக் கடன் குறிப்பிடலுக்கு முன்னர் அடையாளம் காணப்பட்ட நிலுவையிலுள்ள நோயாளின் செலவின தொகைகளுக்கு அதிகபட்சமாக 365 நாட்கள்.

**5.8.2.2 பயிற்சிபெற்ற நர்சிங், இடைநிலை பராமரிப்பு மற்றும் காப்பக சேவைகள்.** KPக்கு வெளியில் வழங்கப்பட்ட சேவைகளுக்காக அதிகபட்சம் 30 நாட்கள்.

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

**5.8.2.3 நீடித்து நிலைக்கும் மருத்துவ உபகரணம்.** விற்பனையாளர் வழங்கிய மருத்து உபகரணத்திற்காக அதிகபட்சம் 180 நாட்கள்.

**5.8.2.4 சிகிச்சை திட்டங்கள் அல்லது பராமரிப்பு காலம்.** சிகிச்சை திட்டங்கள் மற்றும்/ அல்லது பராமரிப்பு காலத்திற்கு KP வழங்குனரால் தீர்மானிக்கப்பட்டபடி அதிகபட்சம் 180 நாட்கள்.

**5.8.2.5 நிதி உதவிக்காக மறு-விண்ணப்பம்.** நடப்பிலுள்ள ஒதுக்கீட்டின் காலாவதி தேதிக்கு முப்பது (30) நாட்களுக்கு முன்னர் அல்லது அதன் பிறகு எப்போது வேண்டுமானாலும் ஒரு நோயாளி இந்தத் திட்டத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

**5.8.3 ஒதுக்கீடு திரும்பப் பெறுதல், நீக்கல் அல்லது திருத்துதல்.** குறிப்பிட்ட சூழ்நிலைகளில், தன் விருப்பப்படி MFA ஒதுக்கீட்டை KFHP/H திரும்பப் பெறலாம், நீக்கலாம் அல்லது திருத்தலாம். சூழ்நிலைகளில் அடங்கியிருப்பவை:

**5.8.3.1 மோசடி, திருட்டு அல்லது நிதிநிலை மாற்றங்கள்.** மோசடி வழக்கு, திரித்துரைத்தல், திருட்டு, நோயாளியின் நிதிநிலையில் மாற்றங்கள் அல்லது MFA திட்டத்தின் நேர்மையை பாதிக்கின்ற பிற சூழ்நிலை.

**5.8.3.2 பொது மற்றும் தனியார் உடல்நல காப்பீட்டு திட்டங்களுக்கு தகுதி.** பொது மற்றும் தனியார் உடல்நல காப்பீட்டு திட்டங்களுக்கு தகுதிகாணப்பட்ட ஆனால் அந்தத் திட்டங்களுக்கான விண்ணப்ப செயலாக்கத்தில் ஒத்துழைக்காத நோயாளி.

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

**5.8.3.3 பிற பேமெண்ட் மூலங்கள் அடையாளம் காணப்படுவது.** MFA ஒதுக்கீட்டை பெற்ற பின்னர் உடல்நல காப்பீடு அல்லது பிற பேமெண்ட் மூலங்கள் அடையாளம் காணப்பட்டால் தகுதிபெற்ற சேவைகளுக்கான கட்டணங்கள் பின்திரும்பல் முறையில் விதிக்கப்படும். அவ்வாறு நடந்தால், (1) நோயாளி தனிப்பட்ட முறையில் பொறுப்பேற்றுல்ல மற்றும் (2) அவருடைய உடல்நல காப்பீட்டினால் செலுத்தப்படாத அல்லது பிற பேமெண்ட் மூலங்களுக்கான ரசீதின் ஒரு பாகத்திற்கு ரசீது வழங்கப்படாது.

**5.8.3.4 உடல்நல காப்பீட்டில் மாற்றம்.** உடல்நல பராமரிப்பு காப்பீட்டில் மாற்றங்களுக்கு ஆளான ஒரு நோயாளி MFA திட்டத்திற்கு மீண்டும் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுவார்.

**5.8.3.5 குடும்ப வருமானத்தில் மாற்றம்.** குடும்ப வருமானத்தில் மாற்றத்திற்கு உள்ளான ஒரு நோயாளி MFA திட்டத்திற்கு மீண்டும் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுவார்.

**5.9 கட்டணங்களில் உள்ள வரம்பு.** Kaiser Foundation Hospital இல் திருப்பி வழங்கப்பட்ட தகுதிபெற்ற மருத்துவமனை கட்டணங்களுக்கான மொத்த டாலர் தொகையையும் MFA-தகுதியுள்ள நோயாளிகளுக்கு விதிப்பது தடைசெய்யப்பட்டதாகும். Kaiser Foundation Hospital இல் தகுதியுள்ள மருத்துவ சேவைகளைப் பெற்றுள்ள மற்றும் MFA திட்டத்திற்கு தகுதிபெற்றுள்ள, ஆனால், MFA ஒதுக்கீடை பெறாத அல்லது MFA ஒதுக்கீடு மறுக்கப்பட்ட நோயாளிக்கு அந்தச் சேவைகளுக்குப் பொதுவாக

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

விதிக்கப்படுகின்ற தொகைகளைக் (AGB) காட்டிலும் அதிகமாக விதிக்கப்படுவதில்லை.

**5.9.1 பொதுவாக பில் செய்யப்பட்ட தொகைகள்.** காப்பீடு செய்துள்ள தனிநபர்களுக்கு அவசரநிலை அல்லது மற்ற மருத்துவரீதியாக அவசியமான பராமரிப்பிற்காக பொதுவாக விதிக்கப்படுகின்ற தொகைகள் (AGB) பொருந்தக்கூடிய குறிப்பிட்ட பிரதேச பிற்சேர்க்கையின் பிரிவு VII இல் விளக்கப்பட்டுள்ளபடி KP மையங்களால் தீர்மானிக்கப்படுகின்றன. பார்க்கவும் *Kaiser Permanente பிரதேசங்களுக்கான பிற்சேர்க்கை, இணைப்புகள் 1-8.*

**5.10 வசூலிப்பு நடவடிக்கைகள்**

**5.10.1 நியாயமான அறிவிப்பு முயற்சிகள்.** KFHP/H அல்லது அதன் சார்பாகச் செயல்படும் கடன் வசூலிப்பு நிறுவனமானது MFA திட்டத்திற்கான கடந்தகால நிலுவை அல்லது நிலுவையிலுள்ள தொகைகளுடன் நோயாளிகளுக்கு அறிவிக்க நியாயப்படியான முயற்சிகளை மேற்கொள்ளும். நியாயப்படியான அறிவிப்பு முயற்சிகளில் அடங்குபவை:

**5.10.1.1** தகுதியானவர்களுக்கு MFA கிடைக்கிறது என கணக்கு வைத்திருப்பவருக்குத் தெரிவிக்கின்ற முதலாவது டிஸ்சார்ஜிற்குப் பிந்தைய 120 நாட்களுக்குள் ஒரு எழுத்துப்பூர்வ அறிவிப்பை வழங்குவது.

**5.10.1.2** KFHP/H அல்லது ஒரு கடன் வசூலிப்பு நிறுவனம் நோயாளி செலவு பேமெண்ட்டை தொடங்க உத்தேசித்திருக்கும் வழக்கத்திற்கு

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

மாறான வசூலிப்பு நடவடிக்கைகளின் (ECAக்கள்) பட்டியலுடன் எழுத்துப்பூர்வ அறிவிப்பை வழங்குவது மற்றும் இத்தகைய நடவடிக்கைகளுக்கான கடைசி தேதி எழுத்துப்பூர்வ அறிவிப்பிலிருந்து 30 நாட்களுக்கு முன்பாக இல்லாதிருப்பது.

**5.10.1.3** முதல் மருத்துவமனை நோயாளி அறிக்கையுடன் MFA கொள்கையின் எளிமையாக விளக்கப்பட்ட சுருக்கங்களை வழங்குதல்.

**5.10.1.4** MFA பாலிசி குறித்தும், MFA விண்ணப்ப செயலாக்கம் வழியாக உதவி பெறும் முறை குறித்து கணக்கு வைத்திருப்பவரிடம் வாய்வழியாக அறிக்க முயற்சிப்பது.

**5.10.1.5** கடந்தகால நிலுவை அல்லது நிலுவையிலுள்ள நோயாளி தொகைகள் ஆகியவை கடன் வசூலிப்பு நிறுவனத்திற்கு மாற்றப்படும் முன்னர் கோரிக்கையின் பேரில் திட்டத்திற்கான தகுதியை தீர்மானிப்பது.

**5.10.2 வழக்கத்திற்கு மாறான வசூலிப்பு நடவடிக்கைகள் நீக்கப்படுகின்றன.** ஒரு நோயாளிக்கு எதிராக கடன் வசூலிப்பு நிறுவனங்கள் தங்கள் விருப்பப்படி நடப்பது, வழக்கத்திற்கான மாறான வசூலிப்பு நடவடிக்கைகளை (ECAக்கள்) மேற்கொள்வதை KFHP/H நடத்துவதுமில்லை அனுமதிப்பதுமில்லை, அந்த நோயாளி:

**5.10.2.1** நடப்பில் MFA ஒதுக்கீடு பெறுபவர் என்றால், அல்லது

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

**5.10.2.2** ECAக்கள் தொடங்கிய பின்னர் MFA விண்ணப்பத்தைத் தொடங்கியிருந்தால். இறுதியான தகுதித் தீர்மானம் அடையப்பெறும் வரை ECAக்கள் நிறுத்தி வைக்கப்படுகின்றன.

**5.10.3 அனுமதிக்கத்தக்க வழக்கத்திற்கு மாறான வசூலிப்பு நடவடிக்கைகள்.**

**5.10.3.1 நியாயமான முயற்சிகளின் இறுதித் தீர்மானம்.** ECAக்கள் எதையும் தொடங்குவதற்கு முன்னர், மண்டல வருவாய் சுழற்சி நோயாளி நிதிநிலை சேவைகள் தலைவர் பின்வருவனவற்றை உறுதிப்படுத்துவார்:

**5.10.3.1.1** MFA திட்டத்தின் நோயாளிக்கு அறிவிக்கும் நியாயமான முயற்சிகளை நிறைவுசெய்தல், மற்றும்

**5.10.3.1.2** MFA இல் விண்ணப்பிப்பதற்கான முதல் கட்டண அறிக்கையிலிருந்து குறைந்தபட்சம் 240 நாட்கள் நோயாளிக்கு வழங்கப்படுகிறது.

**5.10.3.2 Consumer Credit Agencies அல்லது கடன் துறைகளுக்கு அறிக்கையளித்தல்.** KFHP/H அல்லது அதன் சார்பாகச் செயல்படும் கடன் வசூலிப்பு நிறுவனம் வாடிக்கையாளர் கடன் நிறுவனங்கள் அல்லது கடன் துறைகளுக்கு எதிர்மறையான தகவல்களைக் தெரிவிக்கக்கூடும்.

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

**5.10.3.3 நீதித்துறை அல்லது குடிமை நடவடிக்கைகள்.** நீதித்துறை அல்லது குடிமை நடவடிக்கைகள் எதையும் மேற்கொள்ளும் முன்னர், நோயாளியானவர் MFA திட்டத்திற்குத் தகுதியுள்ளவரா என்பதைத் தீர்மானிக்க வெளிப்புற தரவு மூலங்களைப் பயன்படுத்தி நோயாளியின் நிதிநிலையை KFHP/H மதிப்பிடுகிறது.

**5.10.3.3.1 MFAக்கான தகுதி.** MFA திட்டத்திற்குத் தகுதியுள்ள நோயாளிகளுக்கு எதிராக எந்தக் கூடுதல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவதில்லை. MFAவிற்கு தகுதிபெற்ற கணக்குகள் நீக்கப்பட்டு பின்திரும்பல் முறையில் மீண்டும் எழுதப்படுகின்றன.

**5.10.3.3.2 MFAக்கான தகுதியின்மை.** மிகவும் குறிப்பிட்ட நிலைகளில், மண்டல முதன்மை நிதி அதிகாரி அல்லது கட்டுப்பாட்டாளரின் முன் அனுமதியுடன் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம்:

**5.10.3.3.2.1** கூலிகளில் பிடித்தம்

**5.10.3.3.2.2 வழக்குத்தொடுப்பு/ சிவில் நடவடிக்கைகள்.**

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

வேலைவாய்ப்பற்ற மற்றும் பிற குறிப்பிட்ட வருமானமற்ற தனிநபருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படு-வதில்லை.

**5.10.3.3.2.3** வசிப்பிடங்கள் மீதான உரிமைகோரல்கள்.

**5.10.4 தடைசெய்யப்பட்ட வழக்கத்திற்கு மாறான வசூலிப்பு நடவடிக்கைகள்.** KFHP/H எந்தச் சூழ்நிலைகளிலும் கடன் வசூலிப்பு நிறுவனங்கள் பின்வரும் நடவடிக்கைகள் எடுப்பதை மேற்கொள்வதோ, அனுமதிப்பதோ இல்லை:

**5.10.4.1** கணக்கு வைத்திருப்பவரின் முந்தைய தொகைகளைச் செலுத்தாமைக்காக பராமரிப்பை ஒத்திவைப்பது அல்லது மறுப்பது அல்லது அவசரநிலை அல்லது மருத்துவரீதியில் அவசியமான பராமரிப்பை வழங்குவதற்கு முன்னர் பணம் கேட்பது.

**5.10.4.2** கணக்கு வைத்திருப்பவரின் கடனை மூன்றாம் தரப்பினருக்கு விற்பது.

**5.10.4.3** சொத்தை முன்கூட்டியே கைப்பற்றுதல் அல்லது கணக்குகளை முடக்குதல்.

**5.10.4.4** கைது செய்வதற்கான வாரண்ட்டுகளைக் கோருதல்.

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

**5.10.4.5** பொருள் இணைப்புக்கான கடிதங்களைக் கோருதல்.

**5.11 பேரிடர் மற்றும் பொது மருத்துவ அவசரக்காலச் செயல்பாடு.** KFHP/H மாநில அல்லது கூட்டாட்சியால் அறிவிக்கப்பட்ட பேரிடர் அல்லது பொது மருத்துவ அவசரநிலைக்குத் தகுதிபெற்ற அனைவருக்கும், எதிர்பாராத நிகழ்வின் மூலம் பாதிக்கப்பட்ட சமூகங்கள் மற்றும் நோயாளிகளுக்குக் கிடைக்கும் உதவியை மேம்படுத்துவதற்கான தனது MFA திட்டத் தகுதிநிலை வரம்பு மற்றும் விண்ணப்பச் செயல்முறைகளைத் தற்காலிகமாக மாற்றலாம்.

**5.11.1 சாத்தியமான தகுதிநிலை மாற்றங்கள்.** MFA தகுதிநிலை வரம்பில் ஏற்படும் தற்காலிகமான மாற்றங்களில் அடங்குபவை:

**5.11.1.1** தகுதிநிலைக் கட்டுப்பாடுகளை நிறுத்திவைத்தல்.

**5.11.1.2** சலுகை பெறுவதற்கான தகுதிநிலை வரம்பை அதிகப்படுத்துதல்.

**5.11.1.3** அதிக மருத்துவச் செலவுக்கான தகுதிநிலை வரம்பைக் குறைத்தல்.

**5.11.2 விண்ணப்பச் செயல்முறையில் சாத்தியமான மாற்றங்கள்.** MFA விண்ணப்பச் செயல்முறையில் ஏற்படும் தற்காலிகமான மாற்றங்களில் அடங்குபவை:

**5.11.2.1** (1) வெளிப்புறத் தரவு மூலங்கள் மூலம் தங்களின் நிதி நிலையைச் சரிபார்க்க முடியாதபோதும் (2) இந்த நிகழ்வு காரணமாகக் கோரிய நிதித் தகவல்கள் கிடைக்காதபோதும் (3) தகுதிநிலையைக் காட்டும் எந்தவொரு ஆதாரமும் கிடைக்காத போதும் நோயாளிகளின்

அடிப்படை நிதித் தகவலை (அதாவது, வருமானம் (இருந்தால்) மற்றும் வருமானம் வரும் வழி) வழங்கவும் சான்றளிக்கவும் அனுமதிப்பது.

**5.11.2.2** குடும்ப வருமானத்தைத் தீர்மானிக்கும்போது, இந்த நிகழ்வின் காரணமாக ஏற்படும் எதிர்கால வேலை/பணி இழப்பின் தாக்கத்தைக் கருத்தில் கொள்ளுதல்.

**5.11.3 பொதுமக்களுக்குக் கிடைக்கும் தகவல்கள்.** தற்காலிக MFA திட்ட மாற்றங்களை விவரிக்கும் தகவல் MFA திட்ட வலைப்பக்கத்திலும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள KP மையங்களிலும் பொதுமக்களுக்குக் கிடைக்கும்.

## 6.0 இணைப்புப் பகுதிகள்/ஆதாரங்கள்

### 6.1 இணைப்புப் பகுதிகள்

**6.1.1** இணைப்புப் பகுதி A – கலைச்சொற்கள்

### 6.2 இணைப்புகள்

**6.2.1** இணைப்பு 1 – Kaiser Permanente Colorado சேர்க்கை

**6.2.2** இணைப்பு 2 – Kaiser Permanente Georgia சேர்க்கை

**6.2.3** இணைப்பு 3 – Kaiser Permanente Hawaii சேர்க்கை

**6.2.4** இணைப்பு 4 – Kaiser Permanente Mid-Atlantic States க்கான பிற்சேர்க்கை

**6.2.5** இணைப்பு 5 – Kaiser Permanente Northern California க்கான பிற்சேர்க்கை

**6.2.6** இணைப்பு 6 – Kaiser Permanente Northwest க்கான பிற்சேர்க்கை

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

**6.2.7** இணைப்பு 7 – Kaiser Permanente Southern California க்கான பிற்சேர்க்கை

**6.2.8** இணைப்பு 8 – Kaiser Permanente Washington சேர்க்கை

## 6.3 ஆதாரங்கள்

**6.3.1** Patient Protection and Affordable Care Act, Public Law 111-148 (124 Stat. 119 (2010))

**6.3.2** Federal Register and the Annual Federal Poverty Guidelines

**6.3.3** Internal Revenue Service Publication, 2014 Instructions for Schedule H (Form 990)

**6.3.4** Internal Revenue Service Notice 2010-39

**6.3.5** Internal Revenue Service Code, 26 CFR Parts 1, 53, and 602, RIN 1545-BK57; RIN 1545-BL30; RIN 1545-BL58 – Additional Requirements for Charitable Hospitals

**6.3.6** California Hospital Association – Hospital Financial Assistance Policies & Community Benefit Laws, 2015 Edition

**6.3.7** Catholic Health Association of the United States – A Guide for Planning & Reporting Community Benefit, 2012 Edition

**6.3.8** வழங்குநர் பட்டியல். வழங்குநர் பட்டியல்கள் KFHP/H இணையதளங்களில் இவற்றுக்குக் கிடைக்கும்:

**6.3.8.1** Kaiser Permanente of Hawaii (www.kp.org/mfa/hawaii)

**6.3.8.2** Kaiser Permanente of Northwest (www.kp.org/mfa/nw)

**6.3.8.3** Kaiser Permanente of Northern California (www.kp.org/mfa/ncal)

**6.3.8.4** Kaiser Permanente of Southern California (www.kp.org/mfa/scal)

**6.3.8.5** Kaiser Permanente of Washington (www.kp.org/mfa/wa)

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

## இணைப்புப் பகுதி A – கலைச்சொற்கள்

**சமூகம் MFA (CMFA) –** KP மையங்களில் குறைந்த வருமானம் உள்ள காப்பீடு செய்யாத மற்றும் குறைந்த காப்பீடு செய்த நோயாளிகளுக்கு மருத்துவ ரீதியாகத் தேவையான கவனிப்புக்கான அணுகலை வழங்குவதற்காக சமூக அடிப்படையிலான மற்றும் பாதுகாப்பு இணையதள அமைப்புகளுடன் இணைந்து திட்டமிடப்பட்ட medican financial assistance திட்டங்கள்.

**கடன் வசூலிக்கும் ஏஜென்சி –** நேரடியாகவோ மறைமுக நடவடிக்கையின் மூலமோ கடனை வசூலிக்கவோ கடனை வசூலிக்கும் முயற்சியில் ஈடுபட்டாலோ, கடன் வழங்கியவர் அல்லது கடன் வழங்கிய நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டிய கடனை வசூலிக்க அல்லது வசூலிக்க முயற்சிக்கும் ஒரு நபர் அல்லது அமைப்பு.

**நீடித்து நிலைக்கும் மருத்துவ உபகரணம் (DME) –** இதில் அடங்குபவை, ஆனால் இவை மட்டும் அல்ல: DME நேரான ஊன்றுகோல்கள், இருபக்க ஊன்றுகோல்கள், நெபுலைசர்கள், நோய்களைக் குணப்படுத்தும் நோக்கம் கொண்ட மருந்துகள், வீட்டில் பயன்படுத்துவதற்கான ஓவர்-தி-டோர் டிராக்ஷன் யூனிட்கள், சக்கர நாற்காலிகள், வாக்கர்ஸ், மருத்துவமனை படுக்கைகள் மற்றும் வீட்டில் பயன்படுத்துவதற்கான ஆக்ஸிஜன் போன்றவை. DME-இல் குற்றுநிலை, ப்ரோஸ்டெடிக்ஸ் (எ.கா., டைனமிக் ஸ்பிளிண்ட்ஸ்/ஆர்தோசிஸ்கள், மற்றும் செயற்கை குரல்வளை மற்றும் மருந்துகள்) மற்றும் பரிந்துரைச்சீட்டு இல்லாமல் பெறும் மருந்துகள் மற்றும் மென் பொருட்கள் (எ.கா., சிறுநீரக மருந்துகள் மற்றும் காயத்திற்கான மருந்துகள்) ஆகியவை அடங்கும்.

**தகுதியான நோயாளி –** இந்தக் கொள்கையில் விவரிக்கப்பட்டுள்ள தகுதிநிலையைப் பூர்த்திசெய்யும் தனிநபர் அல்லது நோயாளி (1) காப்பீடு செய்யாதவர்; (2) ஒரு பொதுத் திட்டத்தின் மூலம் காப்பீட்டைப் பெறுபவர் (எ.கா., Medicare, Medicaid அல்லது மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் மானியம் பெறுபவர்); (3) KFHP தவிர வேறொரு காப்பீட்டுத் திட்டத்தில் காப்பீடு

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

செய்திருப்பவர்; அல்லது (4) KFHP மூலம் காப்பீடு செய்திருப்பவராக இருக்க வேண்டும்.

**வெளிப்புற தரவு மூலங்கள் –** மூன்றாம் தரப்பு விற்பனையாளர்கள் நோயாளியின் நிதித் திறன் மதிப்பெண்ணைக் கணக்கிடுவதற்கு ஒவ்வொரு நோயாளியையும் ஒரே தரநிலைகளின் அடிப்படையில் மதிப்பிடும் பொதுப் பதிவுத் தரவுத்தளங்களின் அடிப்படையில் ஒரு மாதிரியைப் பயன்படுத்தி நிதித் தேவையை மதிப்பிடுவதற்கு நோயாளியின் தனிப்பட்ட தகவலை மதிப்பாய்வு செய்யப் பயன்படுத்துகின்றனர்.

**கூட்டாட்சி வறுமை வழிகாட்டல்கள் (FPG) –** வறுமை நிலைக்கான United States Department of Health and Human Services தீர்மானித்தபடி ஆண்டு வருமானம் கூட்டாட்சிப் பதிவேட்டில் வருடந்தோறும் புதுப்பிக்கப்படும்.

**நிதி ஆலோசனை –** KP மையங்களில் வழங்கப்படும் சேவைகளுக்கான கட்டணங்களைச் செலுத்த கிடைக்கும் பல்வேறு நிதி மற்றும் மருத்துவக் காப்பீட்டு வாய்ப்புகள் இருப்பதைத் தெரிந்துகொள்ள நோயாளிகளுக்கு உதவ இந்தச் செயல்முறை உதவும். நிதி ஆலோசனை தேவைப்படும் நோயாளிகளில் அடங்குபவர்கள், ஆனால் இவர்கள் மட்டுமல்ல, சுயமாகக் கட்டணம் செலுத்துபவர்கள், காப்பீடு செய்யாதவர்கள், குறைவான தொகையில் காப்பீடு செய்தவர்கள், நோயாளிக் கடனை முழுவதுமாகச் செலுத்த முடியாதவர்கள் ஆகியோர்.

**வீடற்றவர் –** ஒருவரின் தங்குமிடத்தின் மதிப்பீடு பின்வருவதன்படி கணக்கிடப்படும்:

- மனிதர்கள் வாழ்வதற்குத் தகுதியற்ற இடங்கள், அதாவது கார்கள், பூங்காக்கள், சாலையோரங்கள், (தெருக்களில்) ஆளரவமற்ற கட்டிடங்கள்.
- அவசரகாலத் தங்குமிடம்.
- தெருக்களில் அல்லது அவசரகால தங்குமிடங்களில் இருந்து வரும் வீடற்றவர்களுக்கான மாற்று இடம் அல்லது உதவி அடைக்கலம்.

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

- மேற்கூறிய ஏதேனும் ஒரு இடத்தில் இருந்து ஆனால் (தொடர்ந்து 30 நாட்கள்) ஒரு மருத்துவமனை அல்லது பிற நிறுவனத்தில் குறுகிய காலத்தில் தங்கியிருத்தல்.
- வேறுவிதமான தங்குவதற்கு எதுவுமில்லாத, தனியார் குடியிருப்புப் பிரிவிலிருந்து ஒரு வாரத்திற்குள் வெளியேற்றப்படுபவர் அல்லது குடும்ப வன்முறைச் சூழ்நிலையில் இருந்து தப்பியோடியவர் மற்றும் வீடு பெறுவதற்கான வசதிகள் மற்றும் உதவிகள் பெறமுடியாதவர்கள்.
- மனநலம் அல்லது போதைப்பொருள் துஷ்பிரயோக மீட்பு மையத்தில் இருந்து ஒரு வாரத்திற்குள் டிஸ்சார்ஜ் செய்யப்படுபவர், அதில் ஒருவர் தொடர்ந்து 30 நாட்களுக்கும் மேலாக வசிப்பவராகவும் வீடு பெறுவதற்கான நிதி வசதிகள் மற்றும் சமூகத்திடம் இருந்து உதவிகள் பெறமுடியாதவர்களாகவும் இருக்க வேண்டும்.

**KP** – இவற்றில் அடங்குபவை Kaiser Foundation Hospitals மற்றும் மருத்துவமனையுடன் இணைந்த கிளினிக்குகள், Kaiser Foundation Health Plans, Permanente Medical Groups, மற்றும் அவற்றுடன் தொடர்புடைய துணை நிறுவனங்கள், Kaiser Permanente Insurance Company (KPIC) தவிர.

**KP மையங்கள் –** KP வணிகச் செயல்பாடுகளான நோயாளி பராமரிப்பு மையத்தை (எ.கா., ஒரு கட்டிடம் அல்லது ஒரு KP தளம், யூனிட் அல்லது KP கட்டிடம் அல்லாத பிற உட்புற அல்லது வெளிப்புற பகுதி) நடத்துவதில் KP-க்கு சொந்தமான அல்லது குத்தகைக்கு விடப்பட்ட உட்புறம் மற்றும் வெளிப்புறம் உட்பட எந்தவொரு கட்டிட வளாகமும்.

**சலுகை பெறுவதற்கான தகுதிநிலைச் சோதனை –** தனிநபரின் குடும்ப வருமானம் கூட்டாட்சி வறுமை வழிகாட்டுதல்களின் குறிப்பிட்ட சதவீதத்தை விட அதிகமாக உள்ளதா என்பதை அடிப்படையாகக் கொண்டு பொதுக் காப்பீட்டுத் திட்டம் அல்லது MFA க்கான தகுதியைத் தீர்மானிக்க, வெளிப்புற தரவு மூலங்கள் அல்லது நோயாளி வழங்கிய தகவல்களைப் பயன்படுத்தப்படும் முறை.

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

**Medical Financial Assistance (MFA) –** மருத்துவரீதியாகத் தேவையான சேவைகள், தயாரிப்புகள் அல்லது மருந்துகளின் அனைத்து அல்லது பகுதியளவு பணம் செலுத்த முடியாத தகுதியுள்ள நோயாளிகளுக்கும், பொது மற்றும் தனியார் பணம் செலுத்தும் மூலங்களில் வரம்பைத் தாண்டியுள்ளவர்களுக்கும் மருத்துவச் செலவுகளைச் செலுத்துவதற்கான சலுகைகளை வழங்கும் ஒரு திட்டம். நோயாளியின் மருத்துவச் செலவின் சில அல்லது அனைத்தையும் செலுத்துவதற்கான உதவிக்கான திட்ட வரம்பைத் தனிநபர்கள் பூர்த்தி செய்ய வேண்டும்.

**மருந்துப் பொருட்கள் –** மருத்துவரீதியாகத் தேவையான சேவையை வழங்கும்போது உரிமம் பெற்ற மருத்துவப் பாதுகாப்பு வழங்குநரால் பயன்படுத்தப்படும் எலும்பு இணைப்புக் கம்பி, ஸ்லிங்ஸ், காயத்திற்கு மருந்திடுதல் மற்றும் பேண்டேஜ்கள் போன்ற மறுபடியும் பயன்படுத்த முடியாத மருத்துவப் பொருட்கள். இதில் நோயாளி மற்றொரு இடத்திலிருந்து வாங்கிய அல்லது பெறப்பட்ட பொருட்கள் அடங்காது.

**நோயாளிச் செலவு –** KP மையங்களில் (எ.கா., மருத்துவமனைகள், மருத்துவமனையுடன் இணைந்த கிளினிக்குகள், மருத்துவ மையங்கள், மருத்துவ அலுவலக கட்டிடங்கள் மற்றும் வெளிநோயாளிகள் மருந்தகங்கள்) வழங்கப்பட்ட கவனிப்புக்காக நோயாளிக்கு விதிக்கப்படும் கட்டணங்களின் பகுதி. இது காப்பீடு அல்லது பொது நிதியுதவி பெறும் சுகாதாரத் திட்டத்தால் திருப்பிச் செலுத்தப்படவில்லை.

**மருத்துவ நிதி ஆலோசகர் –** KP Senior Advantage Medicare பிரிவு D-இன் கீழ் வரும் வெளிநோயாளி பரிந்துரைச்சீட்டு மருந்துகளுக்கான கட்டணங்களைச் செலுத்த முடியாத குறைந்த வருமானம் கொண்ட Medicare பிரிவு D உறுப்பினர்களுக்கு நிதி உதவியை வழங்குவார்.

**பாதுகாப்புக் குழு –** பொது மருத்துவமனை, சமூக கிளினிக், தேவாலயம், வீடற்றோர் தங்குமிடம், நடமாடும் மருத்துவப்பிரிவு, பள்ளி போன்ற சமூகத்தில் காப்பீடு செய்யப்படாத அல்லது குறைந்த சேவையில் உள்ளவர்களுக்கு நேரடி மருத்துவச் சேவைகளை வழங்கும் இலாப நோக்கற்ற நிறுவனங்கள் மற்றும்/அல்லது அரசு நிறுவனங்களின் அமைப்பு.

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

**குறைவாக காப்பீடு செய்தவர் –** ஒரு நபர், உடல்நலக் காப்பீட்டை வைத்திருந்தும் காப்பீட்டு பிரீமியங்கள், இணை காப்பீடு பெமெண்ட்கள், இணை காப்பீடு மற்றும் விலக்குகள் ஆகியவற்றைச் செலுத்த வேண்டியிருந்து மிகவும் நிதிரீதியான சுமை காரணமாக நோயாளியின் செலவுகளால் முக்கியமான உடல்நலப் பாதுகாப்பு சிகிச்சைகள் தாமதப்படுத்தப்படுதல் அல்லது பெறப்படுவதில்லை.

**காப்பீடு செய்யாதவர் –** மருத்துவக் கவனிப்புச் சேவைகளுக்குக் கட்டணம் செலுத்த முடியாத நிலையில் உள்ள மருத்துவக் காப்பீடு இல்லாத தனிநபர் அல்லது கூட்டாட்சி அல்லது மாநில அரசு வழங்கும் நிதி உதவி பெறாதவர்கள்.

**பாதிப்பு ஏற்படக்கூடிய மக்கள் –** சமூகப் பொருளாதார நிலை, நோய், இனம், வயது அல்லது பிற ஊனம் காரணிகளால் பொது மக்களைவிட ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வில் அதிக ஆபத்தில் இருப்பதாகக் கருதப்படும் மக்கள்தொகைக் குழுக்கள்.

**கைது வாரண்ட்(கள்) –** கைது வாரண்ட் போலவே, குடிமையியல் தவறுகளில் ஈடுபட்ட நபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு அதிகாரிகளுக்கு உத்தரவிடும் ஒரு செயல்முறை.

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

**சேர்க்கை:** **Kaiser Permanente Northern California**

**சேர்க்கைத் தொடங்கும் தேதி:** **ஜனவரி 1, 2024**

**I.** **Kaiser Foundation Hospitals.** இந்தக் கொள்கை அனைத்து KFHP/H மையங்களிலும் (எ.கா., மருத்துவமனை, மருத்துவமனையுடன் இணைந்த கிளினிக்குகள், மருத்துவ மையங்கள் மற்றும் மருத்துவ அலுவலக கட்டிடங்கள்) மற்றும் வெளிநோயாளிகள் மருந்தகங்கள். Kaiser Foundation Hospitals Northern California அடங்குபவை:

| | | |
| --- | --- | --- |
| KFH Antioch | KFH Richmond | KFH San Rafael |
| KFH Fremont | KFH Roseville | KFH Santa Rosa |
| KFH Fresno | KFH Redwood City | KFH South Sacramento |
| KFH San Leandro | KFH Sacramento | KFH South San Francisco |
| KFH Manteca | KFH Santa Clara | KFH Vacaville |
| KFH Modesto | KFH San Francisco | KFH Vallejo |
| KFH Oakland | KFH San Jose | KFH Walnut Creek |

குறிப்பு: Kaiser Foundation Hospitals மருத்துவமனை நியாயமான கட்டணக் கொள்கைகள், California மருத்துவம் மற்றும் பாதுகாப்புச் சட்டம் §127400 உடன் இணங்குகிறது.

Kaiser Foundation Hospitals Northern California இல் ஏதேனும் அவசர மருத்துவச் சேவைகளை வழங்கும் ஒரு அவசரகால மருத்துவர் காப்பீடு செய்யப்படாத நோயாளிகள் அல்லது கூட்டாட்சி வறுமை நிலையில் 400% அல்லது அதற்குக் குறைவான அதிக மருத்துவச் செலவுகளைக் கொண்ட நோயாளிகளுக்குச் சலுகைகளை வழங்குவது சட்டத்தின்படி அவசியமாகும்.

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

**II. MFA கொள்கையின்படி தகுதிபெறும் மற்றும் தகுதிபெறாத கூடுதல் சேவைகள்**

a. **தகுதிபெறும் கூடுதல் சேவைகள்**

i. **வீடற்ற நோயாளிகளுக்கான போக்குவரத்து.** KP மருத்துவமனைகள் அல்லது KP அவசர சிகிச்சைப் பிரிவுகளில் இருந்து செல்வதற்கு வசதியாக அவசர மற்றும் அவசரமற்ற சூழ்நிலைகளில் வீடற்ற நோயாளிகளுக்குப் போக்குவரத்து வசதி உள்ளது.

b. **தகுதிபெறாத கூடுதல் சேவைகள்**

i. செவித்திறன் கருவிகள்

ii. கண்ணாடிகள்

**III. MFA கொள்கையின்படி அல்லது இதன்படி செயல்படாத வழங்குநர்கள்.** Kaiser Foundation Hospitals-இல் MFA கொள்கையின்படி அல்லது இதன்படி செயல்படாத வழங்குநர்களின் பட்டியல்கள் பொதுமக்களுக்குக் கட்டணம் இல்லாமல் KFHP/H MFA இணையதளத்தில் www.kp.org/mfa/ncal என்பதில் கிடைக்கும்.

**IV. திட்டத் தகவல் மற்றும் MFA-க்கு விண்ணப்பித்தல்.** MFA திட்டத் தகவல்களில், MFA கொள்கை, விண்ணப்பப் படிவங்கள், வழிமுறைகள், எளிமையான மொழியில் சுருக்க விவரங்கள் (எ.கா. திட்டக் கையேடுகள்) பொதுமக்களுக்குக் கிடைக்கும், கட்டணமில்லாமல், காகிதத்திலும் மின்னணு வடிவத்திலும் கிடைக்கும். நோயாளி MFA திட்டத்திற்கு KFHP/H சிகிச்சை எடுக்கும்போதோ பெற்ற பிறகோ விண்ணப்பிக்கலாம், நேரடியாகவோ, தொலைபேசி அல்லது காகித விண்ணப்பம் உள்ளிட்ட பல வழிகளில் விண்ணப்பிக்கலாம். (இந்தக் கொள்கையின் பிரிவுகள் 5.3 மற்றும் 5.4 -ஐப் பார்க்கவும்.)

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

a. **ஆன்லைன் விண்ணப்பப் படிவத்தை KFHP/H இணையதளத்தில் பூர்த்தி செய்து சமர்ப்பிக்கவும்.** ஒரு நோயாளி MFA இணையதளத்தில் www.kp.org/mfa/ncal என்பதில் சென்று மின்னணு வாயிலாக விண்ணப்பத்தைப் பூர்த்திசெய்து சமர்ப்பிக்கலாம்.

b. **திட்டத் தகவலை KFHP/H இணையதளத்தில் இருந்து பதிவிறக்கலாம்.** திட்டத் தகவல்களின் மின்னணு நகல்கள் MFA இணையதளத்தில் www.kp.org/mfa/ncal என்பதில் கிடைக்கிறது.

c. **திட்டத் தகவல்களை மின்னணு வாயிலாகக் கேட்கலாம்.** திட்டத் தகவல்களின் மின்னணு நகல்களை MFA-Public-Inbox@kp.org என்ற மின்னஞ்சலில் கேட்டும் பெறலாம்.

d. **திட்டத் தகவல்களைப் பெறவும் அல்லது நேரடியாக விண்ணப்பிக்கவும்.** திட்டத் தகவல்கள் பிரிவு I, *Kaiser Foundation Hospitals* Kaiser Foundation Hospitals என்பதில் உள்ள பட்டியலிடப்பட்ட சேர்க்கை அறை, அவசரகால அறை, நிதி ஆலோசகர்கள் துறைகள் ஆகியவற்றில் கிடைக்கும்.

e. **திட்டத் தகவல்களைக் கேட்கவும் அல்லது தொலைபேசி வாயிலாக விண்ணப்பிக்கவும்.** தொலைபேசி வாயிலாக தகவல்களை வழங்கவும், MFA தகுதிநிலையைத் தீர்மானிக்கவும், MFA-க்கு விண்ணப்பிக்க நோயாளிக்கு உதவவும் ஆலோசகர்கள் உள்ளனர். ஆலோசகர்களைத் தொடர்புகொள்ள:

   தொலைபேசி: 1-800-390-3507

f. **திட்டத் தகவல்களைக் கேட்கவும் அல்லது மின்னஞ்சல் வாயிலாக விண்ணப்பிக்கவும்.** மின்னஞ்சல் மூலமாக ஒரு நோயாளி திட்டத் தகவலைக் கேட்கலாம் MFA-ஐப் பெற பூர்த்திசெய்த MFA திட்ட விண்ணப்பத்தை மின்னஞ்சல் மூலமாக அனுப்பலாம். தகவல்

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

கோரிக்கைகள் மற்றும் விண்ணப்பங்களுக்கு மின்னஞ்சல் அனுப்ப:

Kaiser Permanente
Attention: Medical Financial Assistance Unit
P.O. Box 30006
Walnut Creek, California 94598

g. **பூர்த்தி செய்யப்பட விண்ணப்பங்களை நேரில் வழங்கவும்.** பூர்த்தி செய்யப்பட விண்ணப்பங்களை ஒவ்வொரு Kaiser Foundation Hospital-இல் உள்ள சேர்க்கை அல்லது நோயாளி நிதி ஆலோசகர்கள் துறைகளில் நேரில் வழங்கவும்.

**V. தகுதிநிலை வரம்பு.** ஒரு நோயாளியின் குடும்ப வருமானத்தை வைத்து MFA தகுதிநிலை தீர்மானிக்கப்படுகிறது. (இந்தக் கொள்கையின் பிரிவு 5.6.1 -ஐப் பார்க்கவும்.)

a. சலுகை பெறுவதற்கான தகுதிநிலை வரம்பு: கூட்டாட்சி வறுமை வழிகாட்டலின் 400% வரை.

**VI. தள்ளுபடி அட்டவணை.** medical financial assistanceக்குத் தகுதிபெற்ற ஒரு நோயாளிக்கு KP விதித்துள்ள கட்டணங்களின் தொகைகள் இந்தத் திட்டத்திற்கு நோயாளி தகுதிபெறுவதற்குப் பயன்படுத்தப்பட்ட தகுதிநிலை வரன்முறையின் அடிப்படையில் அமைந்திருக்கும்.

a. **நிதியுதவித் தகுதிச் சோதனை வரன்முறையை பூர்த்திசெய்கின்ற நோயாளி.** நிதியுதவித் தகுதிச் சோதனை வரன்முறையை பூர்த்திசெய்கின்ற ஒரு நோயாளியானவர் நோயாளியின் செலவு அல்லது நோயாளியின் பொறுப்பிற்குரியவற்றுக்கு வழங்கப்பட்ட KP சேவைகளுக்கான கட்டணங்களுக்கு மாறுபடும் அளவிலான தள்ளுபடி பெறலாம். கூட்டாட்சி வறுமை நிலைக்கு (FPL) கீழே நோயாளியின் குடும்ப வருமானம் இருந்தால் தள்ளுபடித் தொகை தீர்மானிக்கப்படுகிறது, அதற்கான வழிகாட்டல்கள்:

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

| **கூட்டாட்சி வறுமை நிலைக்கான வழிகாட்டல்** | | **நிதியுதவித் தள்ளுபடி** |
| --- | --- | --- |
| **அனுப்புநர்** | **பெறுநர்** | |
| 0% - 200% | | 100% தள்ளுபடி |
| 201% - 400% | | 50% தள்ளுபடி |

பகுதியளவு தள்ளுபடி (100%-ஐவிடக் குறைவு) வழங்கப்பட்டால், மீதமுள்ள தொகை முழுவதுமாகச் செலுத்த வேண்டும் அல்லது வட்டியில்லா பேமெண்ட் திட்டத்தை அமைக்க நோயாளிக்கு வாய்ப்பு உள்ளது.

VII. **பொதுவாக பில் செய்யப்படும் தொகைகளைக் கணக்கிடுவதற்கான அடிப்படை (AGB).** KFHP/H மருத்துவக் கவனிப்புக்கான மொத்தக் கட்டணங்களை AGB விகிதத்தால் பெருக்குவதன் மூலம், 'லுக்-பேக்' முறையைப் பயன்படுத்தி, ஏதேனும் அவசரகால அல்லது மருத்துவ ரீதியாகத் தேவையான பிற கவனிப்புக்கான AGB -ஐத் தீர்மானிக்கிறது. AGB விகிதம் மற்றும் கணக்கீடு தொடர்பான தகவல் KFHP/H MFA இணையதளத்தில் www.kp.org/mfa/ncal உள்ளது.

VIII. **திருப்பி அளித்தல்கள்** சில சூழல்களில் KP நோயாளியின் MFA சலுகை செயலில் இருக்கும்போது தவறுதலாகக் கட்டணத்தைப் பெற்றால், செயல்பாட்டில் உள்ள MFA சலுகை காப்பீட்டில் வரக்கூடிய தொகையை நோயாளி செலுத்தியிருந்தால், திருப்பி அளிப்பதற்கான செயல்முறை தொடங்கப்படும்.

a. குடிமையியல் சட்டம் பிரிவு 685.010-இன்படி வட்டி கணக்கிடப்படும்; நோயாளி செலுத்திய கட்டணத்தை மருத்துவமனை பெற்ற தினத்தில் இருந்து கணக்கில் எடுக்கப்படும். தற்போதைய விகிதம் 10%.

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**

## IX. அறிக்கைகள்.

a. **உங்கள் கட்டணத்தைச் செலுத்த உதவி**

பில்லிங் மற்றும் பேமெண்ட் செயல்முறையைப் புரிந்துகொள்ள உங்களுக்கு உதவ நுகர்வோர் சட்ட மையங்கள் இலவசமாக உள்ளன. மேலும் தகவலுக்கு நீங்கள் Health Consumer Alliance 888-804-3536 என்ற எண்ணில் தொடர்புகொள்ளலாம் அல்லது healthconsumer.org இணையதளத்தைப் பார்வையிடலாம்.

b. **Hospital Bill Complaint திட்டம்**

Hospital Bill Complaint திட்டம் என்பது ஒரு மாநிலத் திட்டம், உங்கள் மருத்துவமனை கட்டணத்தைச் செலுத்த நீங்கள் தகுதியானவரா என்பதைத் தீர்மானிக்கும் மருத்துவமனை முடிவுகளை மதிப்பாய்வு செய்யும். உங்களுக்கு நிதியுதவியைத் தவறுதலாக மறுத்திருப்பதாக நீங்கள் கருதினால், நீங்கள் Hospital Bill Complaint திட்டத்தில் ஒரு புகாரைச் சமர்ப்பிக்கலாம். மேலும் தகவலுக்கும் புகாரைச் சமர்ப்பிக்கவும் HospitalBillComplaint.hcai.ca.gov தளத்திற்குச் செல்லவும்.

c. **கவனம்: மொழி உதவி**

உங்கள் மொழியில் உதவி தேவையெனில் 1-800-464-4000 (TTY 711). விடுமுறை நாட்களைத் தவிர்த்து வாரத்தில் ஏழு நாட்களில் 24 மணிநேரமும் உதவி கிடைக்கும். மாற்றுத்திறனாளிகளுக்கான உதவி மற்றும் சேவைகள் (எ.கா. பிரெய்லி எழுத்துகள் கொண்ட ஆவணங்கள், பெரிய பிரிண்ட், ஆடியோ மற்றும் பிற அணுகக்கூடிய மின்னணு வடிவங்கள்) உள்ளன. இந்தச் சேவைகள் இலவசம்.

Proprietary Information. Kaiser Permanente. All rights reserved.
Publication, duplication, disclosure or use for any purpose not expressly authorized in writing is prohibited.
**Printed copies are for reference only. Please see electronic copy for latest approved version.**